மூலிகைமணி

மலர் 18] ருத்ரோத்காரி - ஆவணி (ஆகஸ்டு 83) [இதழ் 9



சடாமாஞ்சில்

விலை ரூ. 1-50

நம் நாட்டு மூலிகைகள்

உ

மூலிகை வளர்ப்போம்! உடல் நலம் காப்போம்!

'மூலிகை மணி'

18 ஆண்டுகளாக மூலிகை வளம் பாடும்
மாத இதழ்

நிறுவன ஆசிரியர்: அமரர் வேலூர் டாக்டர். ஏ. ஆர். கண்ணப்பர்

ஆசிரியர்: வேலூர் டாக்டர். க. வேங்கடேசன், எம்.ஏ. பிஎச்.டி,

தனி இதழ் விலை	ரூ.	1-50
ஆண்டு சந்தா	ரூ.	18-00
ஆயுள் சந்தா	ரூ.	251-00

ஆயுள் சந்தா செலுத்துவோர்க்கு 1971 முதல் 1981 வரையில் வெளிவந்துள்ள 'மூலிகை மணி' இதழ்களின் தொகுப்புகள் 10 வால்யூம்களாகப் பைண்ட் செய்யப்பட்டவை - அன்பளிப்பாகத் தரப்படும். தொடர்ந்து மாதந்தோறும் மூலிகை மணி அனுப்பப்படும்.

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி

வேலூர் டாக்டர். க. வேங்கடேசன், எம்.ஏ., பிஎச்.டி.,
ஆசிரியர்: மூலிகை மணி
மூலிகை மணி தோட்டம்,
4, இரண்டாவது சாதுகார மடம் வீதி,
சலவன்பேட்டை, வேலூர் - 632001.

வேலூர் மூலிகை மணி ஆசிரியருடன் தொலைபேசி தொடர்பு கொள்ள **23551** எனும் எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

— ஆசிரியர்.

சிவன் கும்பிடும் குருநாதா !

ராகம் : ரஞ்சனி] [தாளம் : ஆதி

பல்லவி

முருகா மனமோகன வடிவா - ஷண்முகா
சரவணபவகுகா முத்துக்குமரா (முருகா)

அனுபல்லவி

வருவாய் மயில் மீதிலே வந்தேயருள்
தருவாய் வடி வேலவா
மன முருகப் பாடுகின்றேன்
காத்திடுவாய் முருகா (முருகா)

சரணம்

மாறனை யெரித்த சிவன் பாலா
மால் மருகா குறவள்ளி மணவாளா
சூரனை வதைத்த தேவா தேவகுஞ்சரி மணவாளா
சூலமணிந்த சிவன் கும்பிடும் குருநாதா (முருகா)

- கலாபாரதி -

இதய ஒலி

தங்கள் பத்திரிகையின் பழைய இதழ்கள் (ஆனல் விலை மதிப்பற்றவை) கண்டு தங்கள் பத்திரிகையின் மேல் தீராத மோகம் கொண்டு ஆவலோடு பல இடங்களில் (திருத்தணி, அரக்கோணம், திருவள்ளூர்) தேடினேன்.

சித்த மருத்துவம் தழைத்திட தாங்கள் செய்யும் நற்தொண்டு சொல்லற்கரியது. போற்றுவதற்குரியது. பின்பற்றுவதற்குரியது. தமிழ் மருத்துவம் தமிழ்நாட்டில் மட்டுமன்றி தரணியெங்கும் தலை நிமிர்ந்து உலா வந்திடச் செய்திட வேண்டுமென்பதே அடியேனின் விருப்பமாகும். அந்த விருப்பத்தைத் தாங்கள் நிறைவேற்றி வருகிறீர்கள் என எண்ணும் பொழுது என் நெஞ்சமெல்லாம் பூரிக்கிறது..

A. கோபால், B.A.
இருக்கோவை கிராமம் & அஞ்சல்
நகிரி-517590 சித்தூர் மாவட்டம்.

குமுதம் வார இதழில் தங்கள் பேட்டி கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். சித்த மருத்துவத்தின் பெருமையை ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளீர்கள். திருமதி பிரவீணுவுக்கு மஞ்சள் காமாலை வியாதிதான் முடிவை ஏற்படுத்தியது என்பதுகூட சரியானதில்லை. அவருக்கு இரண்டு முறை கருப்பையில் அறுவைசிகிச்சைசெய்யப்பட்டதால்தான் நோய் அதிகமானது என்பதுதான் பத்திரிக்கைகளின் செய்தி. அலோபதி மருந்துகளும் தற்போது 'சயன்டிபிக்காக' தயார் செய்யப்படுகிறது என்பதும் சரியானதில்லை. அப்படியானல் பென்சிலினும், சல்பா மருந்துகளும் அலர்ஜியை ஏற்படுத்த முடியாது. மஞ்சள் காமாலை வியாதிக்கு அலோபதி மருந்தை சாப்பிட்டு குணமாகாமல் எத்தனை நபர்கள் இறந்து உள்ளார்கள் என்பதற்கு ஒரு பட்ஜெட்டையே கொடுக்க முடியும். சமீபத்தில் பாண்டிச்சேரி முன்னுள் M.L.A. திரு. இராமலிங்கம் மஞ்சள் காமாலை வியாதியால் ஜிப்மர் மருத்துவமனையில் இறந்துள்ளார். தாங்கள் கூறியுள்ளதுபோல் இந்த வியாதிக்கு நாட்டுமருந்துதான் குணப்படுத்த முடியும். இந்த மருத்துவத்தின் மீதுள்ள ஆர்வத்தால் இக்கருத்தை எழுதுகிறேன்.

அன்புள்ள,
S. கிருஷ்ணமூர்த்தி
துறையூர், திருச்சி மாவட்டம்.

உ

மூலிகை வளமே!   முருகா   நாட்டு வளம்!!

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலு மெயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினை புந்தியில் வைத்தடிபோற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே!

மலர் 18] ருத்ரோத்காரி ஆண்டு ஆவணி (ஆகஸ்டு 83) [இதழ் 9

நன்றி! நன்றி!!

அன்பார்ந்த வாசகர்களே!

குமுதம் வார இதழில் 'நாட்டு மருந்து' பற்றிய விவாதத்தில் சித்த மருத்துவத்தின் சிறப்பினைப் புலப்படுத்த அரியதொரு வாய்ப்பினை அளித்த 'குமுதம்' ஆசிரியர் அவர்கட்கும், விவாதத்தில் பங்கேற்ற மாண்புமிகு நீதிபதி மோகன் அவர்கட்கும், டாக்டர் சரோஜினி பழனிப்பன் அவர்கட்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஒலிப்பதிவு நாடாவில் பதிவாகிய இந்த விவாதத்தினைச் சொற்களைக்கூட மாற்றமல் அப்படியே வெளியிட உதவிய நண்பர் 'பால்யூ' அவர்களின் 'தொகுப்புப் பணி' பாராட்டுதலுக்குரியதாகும். மிகுந்த சிரமத்துடன துரிதமாகச் செயல்படட அவருடைய பணி பத்திரிக்கை உலகில் பணிபுரியும் நண்பர்கட்கு முன் உதாரணமாகும்.

இந்த விவாதத்தில் யான் கூறிய பல கருத்துக்களை வரவேற்றுப் பல நண்பர்கள் கடித வாயிலாகவும், நேரிலும் பாராட்டி ஆதரவையும் தெரிவித்துள்ளனர். அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் 'சித்த மருத்துவம்' மிக உன்னதமான நிலையைப் பெறும் என்பதற்குரிய நம்பிகையை என்னால் நன்கு ஊகிக்க முடிகிறது. அதற்குரிய உரமாக இத்தகு பிரச்சாரங்கள் பயனளிக்கும். குமுதம் போன்ற பெரும் பத்திரிக்கைகள் மக்களிடையே சித்த மருத்துவம் பற்றிய உண்மைகளை இடைவிடாது பரப்ப வேண்டும் என்பதே என் அவா.

பொதுவாக நவீன மருத்துவம் அளவுக்கு மீறியும், அநியாயமாகவும் முக்கியத்துவம் தரப்படுவதை எதிர்ப்பதும் சித்த மருத்துவத்தின்மீது அபாண்டமாகப் பழிகூறப்படுவதைத் தகர்க்கவும், அதற்குரிய சிறப்பினை நிலைப்படுத்துவதற்கு உதவும் ஆதரவான கருத்துக்களை எடுத்துக் கூறவே இந்தவிவாதத்தில் நான் பங்கேற்றேன். மருத்துவக் கலை என்பது 'Research and Development' எனும் அடிப்படையில் தொன்றுதொட்டு வளர்ந்து வரும் ஒரு கலையாகும். எந்த மருத்துவ முறையிலும் குறையும் நிறையும் எப்போதும் உண்டு. என்னைப் பொறுத்தவரை இரண்டாயிரம் ஆண்டுகளாக அனுபவ அடிப்படையில் வளர்ந்து, இன்றைய அறிவியல் சோதனைச்சாலைகள்கூட போற்றத்தக்க வகையில் தரமான பல மருந்துகளை உருவாக்கிய பெருமை நம் நாட்டு மருத்துவத்திற்கு உண்டு. இதனை மேனாட்டு மருத்துவ ஆராய்ச்சியாளர்களே ஒப்புக்கொண்டு இதில் ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர். உலக சுகாதார நிறுவனம் போன்ற பெரிய அமைப்புகள் (W.H.O.)உலகெங்கிலுமுள்ள பண்டைய மருத்துவ முறைகளைப் பயன் படுத்துமாறு வலியுறுத்தி, ஆராய்ச்சிகளையும் நடத்தி வருகின்றன. நம் நாட்டு மருத்துவ முறையைவிட மிகவும் பழமை வாய்ந்த சீன நாட்டு மருத்துவ முறையைச்சீனர்கள் இன்றும் போற்றிப் பின்பற்றி வருகின்றனர். நவீன மருத்துவம் பயிலும் சீன மாணவன் ஒவ்வொருவனும் சீன

மருத்துவத்தையும் இணைத்துப் படித்து, அதனைப் பின்பற்ற வேண்டும் என்பது சீன அரசின் கட்டாய விதியாகும். தமிழகத்தில்தான் நாட்டு மருந்தைப் பற்றி வீணான பழிகள் பரப்பப்படுகின்றன. ஒன்று மட்டும் இங்கு நான் குறிப்பிட விரும்புவது என்னவெனில் நவீன மருந்துகளால் நிவாரணம் அளிக்க இயலாத ஆஸ்த்துமா, சரும நோய்கள், வயிற்றுக் கோளாறுகள், வெண்மேகம் போன்ற நாட்பட்ட நோய்கட்கு தரமான, பின்விளைவற்ற, நிரந்தர நிவாரணம் அளிக்கவல்ல திறன் நம் நாட்டு மருந்துகளுக்கு மட்டுமே உண்டு. இந்தத் திறனை உலக அரங்கில் உறுதிப்படுத்தும் ஆராய்ச்சிகள் தற்போது நிகழ்ந்து வருகின்றன.

அடுத்த பத்தாண்டுகளில் இவ் ஆய்வு வெற்றி பெற்று நாட்டு மருந்துகள் போற்றப்படும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை. அதுவரை நவீன மருத்துவத்திற்குத் துதிபாடும் மேதைகள் நாட்டு மருந்துமீது வீணான பழிகளைச் சுமத்தாமல் இருப்பார்களாக!

சபாஷ்!

இலட்சுமிகாந்தன் பாரதி அவர்களே!

இந்திய மருத்துவத் துறை இயக்குனராகக் கடந்த ஓராண்டுக்கும் மேலாக் I.A.S, அதிகாரிகள் பணிபுரிந்து வருகின்றார்கள். சித்த மருத்துவப் பட்டதாரிகள் இயக்குனராக இருந்த காலத்திலேயேஇத்துறை தட்டுத்தடுமாறிதான் வளர்ச்சிபெறும். அளவுக்கு மீறிய ஆங்கில மருத்துவ மோகம் கொண்ட I.A.S அதிகாரிகள் நிர்வாகத்தில் சித்த மருத்துவம் என்ன பாடுபடப் போகிறதோ? என்று கவலை கொண்டு இருந்த எனக்குக் கடந்த 23—10—83 இந்து நாளிதழில், தற்போது இந்திய மருத்துவத்துறை இயக்குனராகப் பொறுப்பேற்றிருக்கும் I.A.S. அதிகாரி திரு. K. இலட்சுமிகாந்தன் பாரதி அவர்கள் National Academy of Medical Sciences எனும் அமைப்பு நடத்திய கருத்தரங்கில் பேசியதாகக் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட செய்தியைப் படித்து ஒரு நிமிடம் அதிர்ச்சி அடைந்தேன்.

Mr. K. Lakshmikanthan Bharti, Special Officer Noon Meal Scheme and Director of Indian Medicine also said medical education required to be revamped. There should be a permanent body to periodically revise the syllabus and the structure of medical courses. Indian systems of medicine should be encouraged and experts in this branch included in bodies like the National Academy of Medical Sciences Rare manuscripts relating to Siddha medicine were now known to be in 15 different countries and steps should be taken to retrieve them. Work on a pharmacopoea in Indian medicine had been completed and it would be published soon.

சாதாரணமாக I.A.S. அதிகாரிகள் சித்த மருத்துவத்தைப் போற்றிப் பேசுவது என்பது அரிது (எனக்குத் தெரிந்து திரு. வி. இராமமூர்த்தி, I.A.S. திரு. பரமசிவம், I.A.S. போன்ற உயர் அதிகாரிகள் சித்த மருத்துவத்தில் ஆர்வம் மட்டுமல்ல; நிறைந்த நம்பிக்கையும் பெற்றவர்களாவர்) National Academy of Medical Sciences போன்ற மருத்துவ அறிவியல் குழுக் கூட்டத்தில்-ஆங்கில மருத்துவ முழக்கங்கள் மட்டுமே கேட்கக் கூடிய இடத்தில் மேற்கண்டவாறு இலட்சுமிகாந்தன் பாரதி அவர்கள் பேசியுள்ளது - உள்ளபடியே பொன்னுடை போர்த்திச் சிறப்பிக்கத்தக்க பெருமை உடையதாகும்.

சித்த மருத்துவத்தின் மீது அவர் கொண்டுள்ள ஆர்வம், பற்று, புலமை, ஆகிய அனைத்தையும் இப்பேச்சின் மூலம் உணர முடிகிறது. திரு. இலட்சுமிகாந்தன் பாரதி அவர்களே! உங்கள் பேச்சைக் கேட்டு மகிழ்கின்றோம். சபாஷ்! என்று போற்றுகின்றோம். உங்கள் ஆதரவான பேச்சு எங்களிடையே புதிய எழுச்சியையும், நம்பிக்கையையும் அளித்துள்ளது. மனதார பாராட்டும் போதே உங்களிடம் 'சுடச்சுட' ஒரு வேண்டுகோளினை முல்லைமணி வைக்கின்றது.

ஆறுவது ஐந்தாண்டுத்திட்டத்தில், ஆயுர் வேத, சித்த, யூனனி ஓமியோபதி, இயற்கை மருத்துவ முறைகளுக்கு தேசிய அளவில்

ஆராய்ச்சி நிலையம் அமைக்கப் போவதாக அறிவிக்கப்பட்டு அவற்றில், சித்தமருத்துவத்திற்குத் தவிர மற்றவற்றிற்குத் திட்டமிட்டவாறு 'National Institute' தொடங்கப்பெற்று அவை சிறப்பாக இயங்கி வருகின்றன.

ஆனல் கேட்பாரற்றுக் கிடக்கும் 'National Institute for Siddha' ஏட்டளவில் தூசி படிந்துள்ளது. 6-வது திட்ட கால அளவு முடிந்து 7-வது திட்டம் தொடங்க இருக்கும் இந்த நேரத்திலாவது

"புண்ணியவான் இலட்சுமிகாந்தன்
பாரதியின் முயற்சியால்
National Institute for Siddha
சென்னையில் அமைய வேண்டும்"

என்பதே எமது வேண்டுகோள்.

எனவே, உடனடியாகச் சென்னையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 'National Institute for Siddha' எனும் அமைப்பை நிர்மாணிக்க உங்கள் திறனை செலவிட வேண்டுகிறேன். இது உங்களுக்கு விடப்பட்டிருக்கும் மிகப்பெரிய சவாலாகவே தோன்றும். எனினும் உங்கள் ஆர்வமும், திறனும், முயற்சியும் வெற்றி தரும் என்பதில் ஐயமில்லை.

"இலட்சுமிகாந்தன் பாரதி வரவால்
சித்த மருத்துவத்திற்கு
இலட்சுமி கடாட்சம் வந்தது"

என்று என்போன்ற சித்த மருத்துவ ஆய்வாளர்கள் குறிப்பிடத்தக்க வகையில் உங்கள் கவனத்தை National Institute for Siddha நோக்கித் திருப்ப வேண்டுகிறேன்.

— க. வேங்கடேசன்

நாவல் தரும் நலம்

டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, B.S.M.B.A.M.,
இராமேசுவரம்'

ஔவை மூதாட்டியை சோதிக்க முருகப் பெருமான் பயன் படுத்திய 'நாவல் பழம்' மக்களின் நோய் வேதனையைப் போக்கி நல் வாழ்வை நல்க வல்லது. கரு நாவல், வெண் நாவல், குழி நாவல், கொடி நாவல், ஆற்று நாவல் என பலவகைப்படும். இதன் வேர், பட்டை, பழம், கொட்டை, துளிர் ஆகியன மருத்துவக் குணம் உடையன.

பித்தத்தின் சீர்கேட்டையும், கப அபிவிருத்தியையும் போக்கும். நாவறட்சி, எரிச்சல் ஆகியன போக்கும். அதிகமாக இதனை உண்டால் பசியின்மை, கைகால் குடைச்சல், தலைபாரம் தோன்றும். இதனை முறிக்க நெல்லிமுள்ளி (அ) நெல்லி வற்றலை மென்று நீர் அருந்தவும்.

நலம் தரும் நாவல் பழ சர்பத்

நாவல் பழச்சாறு வடிகட்டியது 1 லிட்டர் எடுத்து 1 கிலோ சர்க்கரை கலந்து காய்ச்சி, பாகு பதத்தில் இறக்கி, குங்குமப் பூ 2 கிராம், பச்சைக் கற்பூரம் 1 கிராம் பொடி செய்து கலந்து பத்திரப் படுத்தவும். நீர்க்கடுப்பு, நீரில் உப்பு, மூலச்சூடு, கருப்பையில் அழற்சி, சீதபேதி, பெரும்பாடு ஆகியவற்றைப் போக்க இந்த சர்பத்தினை காலை, மாலை 100 மில்லியளவு அருந்தி வரலாம். கருப் பையின் வலிமைக்கும், சிறுநீரகத்தின் செயல் திறனுக்கும் இது உறுதுணையாகும்.

வயிற்றுக் கடுப்பு சீதபேதி, ரத்த பேதி இருந்தால் நாவல் இலைக் கொழுந்தை அரைத்து நெல்லிக்காய் அளவு வாயிலிட்டு மோர் அருந்தவும்.

எட்டிக் கொட்டையின் நஞ்சினை முறிக்க நாவல் பட்டை கஷாயம் பயன்படுத்தலாம்.

தினமணி ஆசிரியருக்கு
கண்டனக் கடிதம்

கடந்த 18-10-83 அன்று தினமணி நாளிதழில் முதல் பக்கத்தில் 'சார் ஒரு நிமிடம்' என்ற கார்ட்டூன் பகுதியில் கீழ்க்கண்ட வசனத்துடன் ஒரு படம் வெளியாகி இருந்தது.

நாட்டு வைத்தியர் ஒருவர் வேறு ஒருவரிடம் கீழ்க்கண்டவாறு கேட்கின்றார்:- "சார்! புது மருந்து கண்டுபிடிச்சா நோபல் பரிசு தர்ராங்களாமே! முடக்குவாதத்துக்கு சூரணம் ஒன்று கண்டுபிடிச்சு இருக்கேன்! நோபல் பரிசு வாங்க என்ன செய்யனும்!" என்று வைத்தியர் கேட்க, அந்த நபர் தலையை சொரிந்து கொண்டு நின்ற வாறு படம் உள்ளது.

இது கேலிச் சித்திரமாகையால் இந்த வசனமும், படமும், சூரணம் தயாரிக்கும் சித்த வைத்தியரைக் கிண்டல் செய்வதாக உள்ளது என்பது தெளிவான உண்மையாகும். இதனைப் படித்துப் பார்த்து 19-10-83 அன்று தினமணி ஆசிரியருக்குக் கண்டனக் கடிதம் ஒன்றினைக் கட்டுரையாக எழுதி அனுப்பினேன். ஆனால் அவர்கள் அதனை வெளியிட வில்லை. வாசகர்களின் பார்வைக்காக—அந்தக் கண்டனக் கட்டுரையை, தினமணி ஆசிரியருக்கு எழுதிய கடிதத்துடன் வெளியிடுகிறேன். நமது முன்னோர்களின் வாழ்வைக் காப்பாற்றியதுடன், இன்றளவும் கிராம மக்களின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருந்து வருவதும், காந்தியடிகள் போற்றியதுமான நம்நாட்டு மருத்துவத்தைப் பழிப்பதுபோல் கேலிச் சித்திரத்தினை வெளியிட்டுள்ள அந்தப் பத்திரிக்கையின் அறியாமையையும் அதற்கு நாம் எழுதிய மறுப்பினை வெளியிடவோ, அன்றி வருத்தம் தெரிவிக்காத ஆணவப்போக்கை வன்மையாக 'மூலிகைமணி' கண்டிக்கின்றது. சித்த மருத்துவ சங்கங்களும், மாணவர்களும், வாசகர்களும் தமது கண்டனத்தை அப்பத்திரிக்கைக்குத் தெரிவிப்பதன்மூலம், 'சித்த மருத்துவத்தின் நியாயமான புகழுக்குரிய பாதுகாப்பினை' அளிக்க வேண்டுகிறேன்.

க. வே.

தினமணி ஆசிரியருக்கு 19—10—83 அனுப்பிய கடிதம்

பெறுநர் : 19—10—83
ஆசிரியர் : பதிவு அஞ்சல்
தினமணி, சென்னை.

அன்புள்ள,

தினமணி ஆசிரியர் அவர்கட்கு வணக்கம். பண்பட்ட தங்கள் பார்வையில், பழம்பெருமைகட்கெல்லாம் புதுமெருகு ஊட்டும் உங்கள் திறமையான நிர்வாகத்தில் பொலிவு பெற்று வரும் 'தினமணி' இதழின் 18-10-83இதழ்கார்ட்டூன் திருஷ்டிபரிகாரமாக வந்து விட்டது குறித்து வருந்துகிறேன். இதனுல் சித்தர் முறை மருத்துவம் பெரிதும் சிதைக்கப்பட்டிருக்கின்றது. எண்ணற்ற சித்த மருத்துவர்களும், மூலிகை மருத்துவ அபிமானிகளும் மனம் புண்பட வாய்ப்புள்ளது. சில அன்பர்கள் எனக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மறுப்புக் கட்டுரை எழுதுமாறு வேண்டினர். இதன் காரணமாக்வும், எனக்கே உரிய இயல்புகேற்ப இந்த கார்ட்டூன் கருத்தினைக் கண்டித்தும் ஒரு மறுப்புக் கட்டுரை எழுதி அனுப்பியுள்ளேன். இப்போதைக்கு இதனை உடனடியாக வெளியிடுவதன் மூலம் எம்போன்ருேர்கள் வேதனையைப் போக்கலாம். வெளியிடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

க. வேங்கடேசன்

மறுப்புக் கட்டுரை

சூரணம் நோபல் பரிசு பெறக்கூடாதா ?

18-10-83 சென்னை தினமணி பதிப்பில் 'சார்! ஒரு நிமிஷம்' எனும் பகுதிக்குத் தாங்கள் சித்த மருத்துவத்தினை பலியாக்கியிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன். பத்திரிகை உலகில் கள்ளிச்செடிகளுக்கிடையே ஒரு கரும்புக் கதிராக தினமணி இருந்து வருவதை நினைந்து பெருமை கொண்டிருக்கும் என் போன்ற வாசகர்கட்கு இன்று வந்த இந்தப் பகுதி பேரிடியாகும்.

எங்கெல்லாம் சித்த மருத்துவம் பழிக்கப் படுகிறதோ அங்கெல்லாம் எதிர்ப்பினைக் காட்டு வதை உயிர் மூச்சாகக் கொண்டிருக்கும் யான் இதனையும் எதிர்க்க நேரிட்டுள்ளது.

நோபல் பரிசு என்ன அரிய பெரிய பரிசு? அதனைப் பெற முடியாத அளவிற்கு அப்படியென்ன சூரணம் தயாரிக்கும் நாட்டு வைத்தியன் தரம் கெட்டுப்போய் விட்டான்? சூட்டும் கோட்டும் மாட்டி, கழுத்தில் சுருக்கு போட்டுக் கொண்டு காதில் ரப்பர் குழாயும், வாயில் புகையிலைக் குழாயையும் துருத்திக் கொண்டு கண்களில் சோடா புட்டிக் கண்ணாடி அணிந்து கொண்டிருக்கும் நவீன மருத்துவனின் கண்டுபிடிப்புக்குத்தான் நோபல் பரிசு தர வேண்டும் என்று விதி ஏதாவது இருக்கிறதா?

அடிமை கொண்ட ஆங்கிலேயன் ஆட்சிக் காலத்தில் கூட நாட்டு வைத்தியன் இந்த அளவு இழிவு படுத்தப்படவில்லை. மாறாக அவர்கள் ஆட்சியில் தான் நாட்டு மருத்துவன் 'அனுபவத்தின் வாயிலாக திறமையானவன் என்று மதிக்கப்பட்டு R. I. M. P. என்ற சான்றிதழையும்' கொடுத்துச் சிறப்பித்தான்.

சுதந்திரம் அடைந்த பின் இந்த மதிப்பு பறிபோயிற்று. R. I. M. P சான்றிதழும் நிறுத்தப்பட்டது. உண்மையை ஆராய்ந் தால் இந்தியாவைப் பொறுத்தவரை எழுபத்தைந்து சதவீத மக்களின் நல வாழ்விற்குப் பாதுகாப்பு அளித்து வருவது நம் நாட்டு மூலிகை மருந்துகள் தான்.

'தலைவலி என்றால் சுக்கு கஷாயமும்'
'வயிற்றுக் கோளாறு என்றால் அஷ்டசூரணமும்'
'முடக்கு வாதம் என்றால் முடக்கத்தான் சூரணமும்'
'சிறுநீர் வரவில்லையென்றால் நெருஞ்சில் சூரணமும்'

என்று இவைதான் அருமருந்தாக இன்றும் பயனளித்து வருகின்றன.

நகரத்து மக்களைப்போல் தலைவலிக்கு மாத்திரை சாப்பிட்டு, குடலில் ரத்தக் கசிவை உண்டாக்கிக் கொண்டு அதனால் மரணமடைவதும், ஆஸ்த்துமாவிற்கு ஊசிபோட்டுக்

கொண்டால், பின் விளைவாக சரும நோயைப் பெறுவ்தும், தூக்கமின்மைக்கு மாத்திரை சாப்பிட அது மீளாத்துயிலில் ஆழ்த்தி விடுவதும் போன்ற கேடுகெட்ட நிலைகளைச் சூரணம் உண்டாக்குவது இல்லை. 'கத்தி போய் வாலு வந்தது டும் டும்' என்ற கதை போல் தலைவலிக்கு மருந்து சாப்பிட்டால் குடல் நோயை வரவழைக்கும் நவீன மருந்துக் கண்டுபிடிப்பு கள் எல்லாம் நோபல் பரிசுக்குரியதாக்கும்போது,

பின் விளைவு தராமல், நோயை அடியோடு களையும் நாட்டு மருந்தான சூரணத்திற்கு நோபல் பரிசு கொடுக் காதது குறித்துக்குறைபட்டுக் கொள்ளாமல் 'நையாண்டி' செய்கின்ற நிலை சிறுபிள்ளைத்தனமானது மட்டுமின்றி வன்மையாகக் கண்டிக்கத் தக்கதுமாகும்.

இந்த நையாண்டியை தினமணி செய்தது மிகவும் வருந்தத் தக்கதாகும். யானைக்கும் அடிசறுக்கும் என்பது தினமணி விஷயத்திலும் உண்மையாகி விட்டது என்றுதான் சமாதானம் செய்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

கேலிச் சித்திரமும் உண்மையாகும் காலம் நெருங்கி வருகிறது.

கேலிக்காக தினமணி குறிப்பிட்ட சூரண விஷயம் உண்மை யில் நோபல் பரிசு பெறத் தக்க வகையில் உலக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் சாதனை புரிந்து வருகிறது. தமிழ்நாட்டுக்கே உரிய தூதுவளையும், நித்யகல்யாணியும் ஆரம்ப காலத்தில் சூரணம் என்று எள்ளிநகையாடப்பட்டது. ஆனால் இன்று புற்று நோயைப் போக்கும் அற்புத மூலிகை என்று அவை போற்றப் படுகின்றன.

சில ஆண்டுகட்கு முன்னர் சென்னை மருத்துவ கல்லூரி யில் டாக்டர் லலிதா காமேசுவரன் அவர்களால் பல்வேறு

மூலிகைச் சூரணங்களின் திறன் ஆராயப்பட்டன. அவற்றில் ஒன்று பொடுதலை எனும் மூலிகைச் சூரணம் மூட்டுவாதத் திற்கும், அமுக்கனுங்கிழங்கு சூரணம் மூட்டு அழல்வாதத் (Anti-rhematoied Arithrities) திற்கும் மருந்தாகப் பயனுகிறது என்று கண்டு பிடித்துள்ளனர். உண்மை இவ்வாறு இருக்கும் போது நோபல் பரிசு என்ன? அதற்கு மேலும் சிறப்பு வாய்ந்த பரிசுகளைக்கூடப் பெறத் தக்க சிறப்பான தகுதிகள் நம் நாட்டு மருத்துவத்திற்கு நிச்சயமாக உண்டு.

நீரிழிவு நோய்க்கு சிறுகுறிஞ்சான் எனும் மூலிகைச் சூரணம் நிவாரணம்அளிப்பதைப்பற்றி நுட்பமாக ஆராய்ந்த சென்னை தரமணியில் உள்ளஉயிர்வேதியியல்துறை பேராசிரியை டாக்டர் ராதா சண்முக சுந்தரம் அவர்கள், சில உண்மைகளைக் கண்டு பிடித்துள்ளார். அவர் கண்டுபிடித்த முடிவுகளில் ஒன்று நீரிழிவு ஆராய்ச்சியாளர்களைத் திகைக்க வைத்துள்ளது. கணைய நீரிலுள்ள (Beta Cell) 'பீட்டா செல்' அழிவுகளே இன்சுலின் சுரப்பு குறைவதற்குக் காரணமாகும். அழிந்த பீட்டாசெல் மீண்டும் உயிர்ப்புச் சக்தியைப் பெற உதவுகிறது சிறுகுறிஞ்சான் சூரணம் என்பதை டாக்டர் ராதா சண்முக சுந்தரம் அவர்களின் ஆராய்ச்சி முடிவு உறுதிப்படுத்தி வருகின்றது. இந்த ஆராய்ச்சி உலக அரங்கினை மெல்ல எட்டி வருகின்றது. அடுத்த சில ஆண்டுகளில் இக்கருத்து ஏற்கப்பட்டு விடும். அப்போது நோபல் பரிசு சிறுகுறிஞ்சான் சூரணத்திற்கு கிட்டும் என்பதில் எனக்கு ஐயமில்லை. அதன் பின் முடக்குவர்தத்திற்கு என்ன எல்லா வகை நோய்க்கும் சித்த மருந்துகளை நோக்கி ஆய்வாளர்கள் படையெடுப்பார்கள். கேலிச் சித்திரம் போடுவோர் பாராட்டுச் சித்திரம் போடுவார்கள். இன்று கேலி பேசும் இவர்களின் விதண்டாவாதம் எதிர் காலத்தில் முடக்கு வாதமாக மாறத்தான் போகிறது. அதுவரை நாட்டு வைத்தியர்களைக் கிண்டல் செய்யாமல் இருப்பார்களாக!

— க. வேங்கடேசன்

கண்ணப்பரின் மூலிகை மருத்துவம்

டான்சில்ஸ் தணிய

காது, மூக்கு, தொண்டைவலி தணிய திருநீற்றுப்பச்சை இலை, கற்பூரவல்லி இலை, மஞ்சள் கரிசலாங்கண்ணி மூன்றும் வகைக்கு 100 கிராம் அளவும், சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு 15 கிராம் வைத்து அம்மியில் மைபோல அரைத்து சுண்டைக்காயளவு உருண்டைகளாக உருட்டி நிழலுணர்த்தலாக உலர்த்தவும். தினமும் காலை, மாலை ஒரு மாத்திரை வாயிலிட்டு காய்ச்சிய பசும்பால் அருந்தி வர டான்சில்ஸ், மூக்கில் சதை வளர்தல், பீனிசம், அடிக்கடி இருமல், சீதளத்தால் காது அடைத்தல் போன்ற தொல்லைகள் யாவும் விலகும். தொடர்ந்து 40 நாட்கள் செய்யவும், நோய் நாட்பட்டதாக இருப்பின் குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி வைத்து அரைக்கவும்.

ஓடு வாய்வு கட்டிகளுக்கு

ஓணுங்கொடியை இடுப்பில் தினமும் கட்டி வைக்க ஓடுவாய்வு கட்டிகள் வேறு மருந்தின்றி குணமாகும்.

ஓணுங்கொடி சாறுடன் உத்தாமணி சாறு சமமாக எடுத்து சிறிது உப்பு, புளி சேர்த்து கொதிக்க வைத்து கை கால் மூட்டுகளில் வலி, வீக்கம் இருப்பின் பற்று போடவும்.

இடு மருந்தின் வேகம் தணிய

இடுமருந்து உண்டவர் என்று திண்மையாக அறிந்த பின்னர் அவருக்கு நாள் தோறும் காலை வெறும் வயிற்றில் ஒரு கைப்பிடி அகத்திக்கீரை சரியாக மைபோல் கூழாகும் வரை மென்று உண்ண வேண்டும். ஒரு வாரம் உண்டபின் ஒரு வாரம் விட்டு விடவும். அந்த வாரத்தில் விளாம்பழம் உண்ணவும். மறு வாரம் தொடரவும், அகத்தி இலையை இடித்து சாறு எடுத்து ஒரு மணி நேரம் ஊறவைத்து பின்னர் தலை முழுகி வர மனகலக்கம், சித்த பிரமை, பயம், பைத்தியம் போன்றவை கூட விலகும்.

வெண் குட்டம் நீங்க

வில்வ இலைக்கும் செம்பு பாத்திரத்திற்கும் உள்ள நெருங்கிய மருத்துவத் தொடர்பை வெளிப்படையாக எந்த சித்தரும் சொல்ல வில்லையானாலும் ஒரு அனுபவ உண்மை உண்டு! ஒரு பெரிய செம்பு பாத்திரம் நிறைய இரவு நேரத்தில் தூய நீரை விட்டு அதில் இரண்டு கைப்பிடியளவு வில்வ இலையை போட்டு நன்ருய் கலக்கி மூடி வைத்து விடவும். விடியுமுன் அதிகாலை எழுந்து தலையில் கொட்டி குளியல் செய்ய வேண்டும். உடம்பில் சோப்பு எதையும் தேய்க்காமல் பீர்க்கம் கூடு, அரைப்பு, சீயக்காய் தேய்த்தல் நன்று. இப்படியாக நாள் தவருமல் செய்துவர, பித்த ஆதிக்கத்தால் வந்த வெண்குட்ட நோய்கள்; கண்ட இடத்திலேயே கண்ட நேரத்தில் காபியை வயிற்றில் ஊற்றிக்கொண்டு வந்ததால் வந்த பித்த உடல் வெளுப்பு; இவைகள் யாவும் துவரை அளவும் அதற்குச் சிறியனவாக இருப்பின் அவைகளுக்கு 2 மண்டலம் முதல் 4 மண்டலத்திற்குள் மறைந்து போகும். மேற்குறிப்பிட்ட அளவுகளுக்கு மேலும் உடலெங்கும் தீவிரமாக பரவிபடரும் வெண்குட்ட நோயாளிகள் கூட இதை செய்யலாம். சுலபமான முறை! இந்த சிகிச்சையின் போது பித்தச் சூடான காய்கறிவகைகள், எண்ணெய்வித்துக்கள் மாமிசஉணவுகளை நீக்கி, தயிர், பழம் போன்ற குளிர்ச்சி வகைகளைத்தான் கொள்ள வேண்டும். சூரிய உதயத்திற்குப் பிறகு வில்வக் குளியல் செய்வதும் பயனற்றதாகும். தென்னமரத்தின் ஒவ்வொரு உறுப்பும் ஒரு குணத்தை உடையதானுலும் பொதுவாக இது வெப்பத்தைக் கொண்டு வளருவதால் உடல் சூட்டைத் தணிக்கும் குணமுடையதாகும்.

கருப்பை கோளாறுகட்கு

தென்னைவேர்உஷ்ண வாயுவைக் கண்டிக்கும். வேரை சிறு துண்டுகளாக செய்து ஒரு கைபிடி அளவு எடுத்து இரண்டு குவளை நீர் விட்டு ஒரு குவளையாகும் வரை சுண்டக்காய்ச்சி தினம் இரண்டு வேளை குடித்து வர அடிவயிறு சம்பந்தமான வாய்வு, உஷ்ணம், அடி வயிறு நோய், மகோதரம், நீர்பாண்டு ஆகியவைகள் குணம் ஆகும். இதன் வேர் 1 பலம், அசோக மரப்பட்டை 1 பலம் ஆக இரண்டும் நறுக்கிப்போட்டு முன் சொல்லியபடி குடிநீர் காய்ச்சி தினம் இரண்டொரு வேளை குடித்துவர பெண்கள் கருப்பாசய வலி, கருப்பையைப் பற்றிய நோய்கள் யாவும் நீங்கி கருப்பை துப்புரவு ஆகும். உஷ்ணம் நீங்கும்; உடல் சூடு தணியும்.

பூச்சித் தொல்லை அகல

சுண்டைக்காய் கைப்பு ருசியையுடையதாகையால்சுத்த சைவஉணவு உண்பவர்கள் அடிக்கடி பச்சையாகவே சுண்டைக்காய் சாம்பார், பச்சடி முதலானவைகளாகச் செய்து சாப்பிடுவார்கள் காயை நசுக்கி

நெய் அல்லது ஆமணக்கெண்ணெய் விட்டு நன்கு வதக்கிக்கொண்டு வெங்காயம், கருவேப்பிலை, கொத்தமல்லி, இஞ்சி, மிளகாயும் கிள்ளிப் போட்டு சாம்பார் போலவே இதையும் தாளிதம் செய்து சாப்பிட வெகு ருசியாய் இருக்கும். அத்துடன் பசியைத் தூண்டும். மலக் கிருமிகள், ஈளை, காச இருமல் நோயாளிகள், வாதரோகத்தால் துன் புறுபவர்கள், மூலச்சூட்டு உடம்பினர், மூல ரோகத்தில் ஆசனக் கடுப்பும், திமிர்ப்பூச்சிகளால் அரிப்பும் ஏற்பட்டு தொல்லை படுபவர் களும் இந்த சுண்டைக்காயை வாரம் 2 முதல் 4 தடவை உணவில் உண்டு வர மருந்துகளுக்குப் பணம் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை.

சுண்டைக்காய் வற்றல்

மலைச் சுண்டையை சுத்தம் செய்வது அவசியமாகும். தேவை யான சுண்டை வற்றலை வாங்கி புளித்த மோரும் அளவுடன் உப்புங் கூட்டி அதில் ஊறவைத்த பின்பு உலர்த்தி எடுக்க வேண்டும். இப்படி இரண்டு மூன்று முறை ஊறவைத்து எடுத்து உலர்த்தி வைத்துக் கொண்டால் சிறுவர் முதல் பெரியோர் வரையில் மற்றய வற்றல் களோடு இரவு சாப்பட்டில் நெய் அல்லது நல்லெண்ணெயில் வறுத்து வைத்துக் கொண்டு சாப்பிடலாம். குறிப்பாக மார்ச்சளி, ஆஸ்துமா, காச நோய் ஆகியவைகளால் வேதனைபடும் எல்லோரும் பயன் படுத்தலாம். — (தொடரும்)

உ

மூலிகை வளர்ப்போம்! உடல்நலம் காப்போம்!!

டாக்டர் க. வேங்கடேசன், எம்.ஏ., பிஎச்.டி.,
ஆசிரியர் : 'மூலிகை மணி'
(சித்த மருத்துவத் திங்களிதழ்)
மூலிகை மணி தோட்டம்,
நெ. 4, இரண்டாவது சாதுகாரமடம் வீதி,
சலவன்பேட்டை, வேலூர்-632001.

மூலிகை மணியின் கிளை அலுவலகங்களில் மருத்துவ ஆலோசனை

ஆஸ்துமா, குடற்புண், ஆண்மைக் குறைபாடுகள், தோல் சம்பந்தமான நோய், வெண்மேகம், இரத்த மூலம், இரத்த சோகை, காலில் ஆணி, நீரிழிவு போன்ற நோய்களுக்கு நிரந்தர குணம் பெறலாம்.

கோவையில்

ஒவ்வொரு மாதமும் 1, 2, 3 ஆகிய தேதிகளில்
இடம் : வசந்தம் ஸ்டோர்ஸ்,
11-35 கிராஸ்கட் ரோடு, காந்திபுரம்,
கோவை-12. போன் : 22243.

பெங்களூரில்

ஒவ்வொரு மாதமும் 6-ஆம் தேதி மட்டும்
இடம் : 'மூலிகை மணி ஹெர்பல் கிளினிக்'
ESVEE CARGO & TRAVELS
(Opp. VISL Buildings)
No. 78-A. B. Aruna Mansions
J. C. Road, Bangalore-560 002.
போன் ; 224176, 225439, 365138

மதுரையில்

ஒவ்வொரு மாதமும் 9, 10 ஆகிய தேதிகள்
மதுரை சித்ரா நியூஸ் ஏஜென்சி
18, நன்மை தருவார் கோயில் தெரு,
மதுரை-1. போன் : 32155.

திருச்சியில்

ஒவ்வொரு மாதமும் 11-ஆம் தேதி அன்று திருச்சி ஜங்ஷன் அருகில் 'அசோக் பவன்' விடுதியில் மூலிகைமணி ஆசிரியர் டாக்டர் க. வேங்கடேசன் அவர்களை காலை 7-00 மணி முதல் இரவு 10-00 மணி வரை சந்தித்து, மருந்தும் ஆலோசனையும் பெறலாம்.

சென்னையில்

சென்னையில் ஒவ்வொரு மாதமும் 15, 16 ஆகிய தேதிகளில் மட்டும் டாக்டர் க. வேங்கடேசன் அவர்களை 22, திருமலைப் பிள்ளை வீதி எண் 2, பாலாஜி அவின்யூ, தி. நகர் சென்னை-17. (போன்: 427947) முகவரியில் சந்திக்கலாம்.

வேலூரில்

மற்ற நாட்களில் 17 முதல் 30 வரை
24, 6-வது மேற்கு குறுஞ்சாலை, காந்தி நகர்,
வேலூர்-6. போன்: 23551.
எனும் முகவரில் சந்திக்கலாம்.

நேரில் வருமுன் கடிதம் எழுதவும்.

நேரில் வர இயலாதவர்கள் நோயின் விவரத்தை எழுதி 1 ரூபாய் அஞ்சல் தலை வைத்து, வேலூர் முகவரிக்கு கடிதம் எழுதினல் ஆலோசனை வழங்கப்படும்.

சித்த மருத்துவத்தின்
நம்பிக்கை நட்சத்திரங்கள்



டாக்டர் வேலுச்சாமி எம்.டி. (சித்தா)

காலத்தை வென்று வாழ்ந்து மக்களை வாழ்வித்து வரும் 'சித்த மருத்துவக் கலை' கால வளர்ச்சிக்கேற்ப அவ்வப்போது புதுக்கோலம் புனைந்து வருகிறது. அவ்வகையில் கடந்த 10 ஆண்டுகளாகச் 'சித்த மருத்துவத்தை' இக்கால அறிவியல் அணுகு முறையோடு படித்து-ஆராய்ந்து பலர் புது மெருகூட்டி வருகின்றனர். இவர்களை 'சித்த மருத்துவத்

தின் நம்பிக்கை நட்சத்திரங்கள்' எனத்தாராளமாகப் பாராட்ட லாம். இத்தகு 'நம்பிக்கை நட்சத்திரங்களில்' முதல் நட்சத் திரமாக 'மூலிகைமணி' பாராட்டுவது டாக்டர் வேலுச்சாமி அவர்களையே ஆகும்.

சென்னை அரும்பாக்கத்தில் மைய அரசின் சார்பில் இயங்கும் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் துணை இயக்குனராகக் கடந்த மூன்றாண்டுகளாகப் பணிபுரிந்து வரும் டாக்டர் வேலுச்சாமி அவர்களைக் கடந்த ஐந்தாண்டு களாக நான் நன்கறிவேன். வயதிலே இளைஞர் என்பதை முகத்தோற்றம் காண்பித்தாலும் ஆராய்ச்சியிலே மூத்தவர் என்பதை அவருடைய 'முன் வழுக்கை' முரசொலிக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சி நிலையம் இயங்கி வந்த போதிலும், டாக்டர் வேலுச்சாமியின் நிர்வாகத்தில் தான் வெளியுலகுக்கு இது பற்றிய தகவலே பரவிற்று.

நிர்வாகப் பணிகளிலேயே முழு நேரத்தையும் செல விட்டு விடாமல், சரிபாதி நேரத்தை ஆராய்ச்சியிலும் செல விடுவது-இவரிடத்து யான் காணும் சிறப்பான குணம். சித்த மருத்துவத்தில் உயர்படிப்பான 'எம்.டி' பட்டம் பெற்றுள்ள டாக்டர்வேலுச்சாமி, ஆராய்ச்சி வேட்கை கொண்டவேங்கை என்பதை மணிக்கணக்கில் அவருடன் உரையாடியபோது உணர்ந்தேன். சித்த மருத்துவத்தின் பழம் பெருமைகளைப் புறக்கணிக்காமல், புதிய வளர்ச்சிகளைப் புகுத்தி-புத்துயிர் அளிப்பதில் அவர் ஆர்வமுள்ளவராக இருக்கின்றார்.

இவருடைய நிர்வாகத்தில் இயங்கிவரும் மைய அரசின் சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம். புதிய எழுச்சிகளையும், பரந்த எல்லைகளையும் காணும் என்பதில் ஐயமில்லை.

சித்த மருத்துவத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் பல வற்றை உருவாக்கும் முதல் நட்சத்திரமாக விளங்கி வரும் டாக்டர் வேலுச்சாமியை 'மூலிகை மணி' பாராட்டி வாழ்த்து கின்றது.

நம்நாட்டு மூலிகைகள்

248-வது மூலிகை

வாய் விளங்கம்

Embelia Ribes

டாக்டர் க. வே.

நாட்டு மருந்துக் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும் 'வாய்விளங்கம்'—கிருமி நாசினியாக மருத்துவத்தில் பயனு கின்றது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடு களில் மலைப்பாங்கான இடத்தில் வளரும் நெடி வகையைச் சார்ந்த இந்த மூலிகையின் விதை ஆரஞ்சு வண்ணத்தில் தனியாவைப்போல் உருவமுடையதாகும். கொடியுடன் கூடிய மணமுடையது, கைப்புச் சுவையை உடையது ; உட லுக்கு வெப்பத்தை அளிக்கும் தன்மை கொண்டதாகும்.

மருத்துவக் குணம்

வாய் விளங்கத்திற்கு வடமொழியில் 'கிருமிஞ்ச' என்று பெயருண்டு. இதன் பொருள் 'நுட்பமான கிருமிகளைக் கொல்லும் திறனுடையது' என்பதாகும். பெயருக்கேற்ப குடலில் சேரும் நாடாப்புழுக்கள், நாக்குப்பூச்சி, கொக்கிப் புழு ஆகியவற்றை அடியோடு அகற்றும் திறன் 'வாய் விளங் கத்திற்கு' நிரம்ப உண்டு. செரிமாணத்தை உண்டுபண்ணி, உடலுக்கு வேண்டிய சூட்டினைத் தரும். குன்மம், பெரு உடல், வாய்வுக்கோளாறு, பாம்பு, தேள்கடி நஞ்சுகள், தலைவலி, கைகால் குத்தல் குடைச்சல் ஆகியவற்றைப் போக்கும். நுட்புழுக் கொல்லியாகவும், மூல நோயில் ஆசனச் கடுப்பு, ரணம் ஆகியவற்றையும் குணப்படுத்தும் திறனுடையது.

செய்முறைகள்

வயிற்றுப் புழுக்கள் வெளியேற;- சுத்தமான வாய் விளங்கம் 100 கிராம் வாங்கி லேசாக வறுத்துப்பின் பொடி செய்து வைத்துக் கொண்டு தினம் காலை, மாலை குழந்தை களாயின் 5 சிட்டிகையும், சிறுவர்கட்கு கால் ஸ்பூன் அளவும் பெரியவர்கட்கு அரை ஸ்பூன் அளவும் தேனில் குழைத்து உண்ணச் செய்து-இம்மாதிரி 2 நாள் செய்து மறு காலை நாள் சுத்தமான ஆமணக்கெண்ணை 2 ஸ்பூன் உள்ளுக்குச் சாப்பிட வயிற்றுப் புழுக்கள் அனைத்தும் செத்து மலத்துடன் வெளி யேறும். இச்சா பத்தியம் இருக்கவும்.

சிறுவர்களின் அஜீரணத்திற்கு

5 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் சரிவர சாப்பிடாமல் இருப்பின் இந்தப்பொடியை தினம் 2 வேளை, வேளை 1-க்கு 1 கிராம் அளவு வாயிலிட்டு பால் சிறிது புகட்டிவர பசி நன்கு எடுத்து செரிமாணமாகும். செரியாமை காரணமாக வரும் வயிற்று வலி, பொருமல் ஆகியவையும் தீரும். 5 முதல் 10 நாட்கள் செய்து வரவும்.

தலைவலி, மூக்குத்தண்டு வலி நீங்க

சுக்குத் துண்டுடன் வாய்விளங்கத்தைச் சேர்த்துப் பொடி செய்து சிறிது வெண்ணெய் கூட்டி நன்கு அரைத்து தலை, மூக்குத்தண்டு மீது பற்றிட அவை நீங்கும். சாம் பிராணிப்புகை காட்டுவது விரைவில் வலிநீங்க உதவும்.

தேள்கடி, வீக்கம் கரைய

பாம்பு, தேள், பூரான் கடி நஞ்சு முறியவும், கழுத்து, கால் மூட்டுக்களில் வீக்கம் இருந்தாலும், வாய் விளங்கத்தை பாலில் அரைத்துப் பற்றிட அவை நீங்கும்.

சித்த மருத்துவர்கள், இரசம், வங்கம் போன்ற கட்டு மருந்துகளைச் செய்ய இதனைப் பெரிதும் பயன்படுத்துவர். சிறு குழந்தைகளின் மலச்சிக்கலை நீக்கவும், வயிற்றுப்பூச்சி களை வெளியேற்றவும், மார்புச் சளியை அகற்றவும், மூட்டு

வாதம் மற்றும் சருமநோய் நீங்கவும் இதன் பழத்தையும், விதையையும் நாட்டுப் புறங்களில் பயன்படுத்துகின்றனர்.

இதனைத் தொடர்ந்து 10 நாட்களுக்குமேல் பயன்படுத்தினால் சிறுநீர் சிவந்து காணும். எனவே, இடைவெளி விட்டும் அளவோடும் பயன்படுத்த வேண்டும்,

ஆயுர் வேதத்தில் மிகச்சிறந்த பூச்சிக்கொல்லி மருந்தாக 'வாய் விளங்கம்' பயன்படுத்தப் படுகிறது.

மூலநோய் முற்றி ஆசனவாயில் புண் ஏற்படும்போது வாய் விளங்கத்தைப் பொடிசெய்து தேங்காய் எண்ணெயுடன் குழைத்து புண்மீது தடவிவர அவை ஆறும். இதனைக்கால மறிந்து அளவோடு பயன்படுத்தினால் ஆயுள் விருத்தியாகும் என்று சுசுருதர் குறிப்பிடுகின்றார்.

நாடாப் புழுக்களை வெளியேற்ற இதன் பொடியை சர்க்கரை அல்லது தேனுடன் குழைத்து வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நற்பலன் தரும் என்று குறிப்பிடுகின்றார் ஆர். என். சோப்ரா.

ஓமியோபதி முறையில் தயாராகும் இதன் தாய் திரவத்தை 1 x வீரியத்தில் தினம் இரு வேளை கொடுத்துவர பூச்சித் தொல்லையால் அவதிப்படுபவர்கள் துரித நிவாரணம் பெறுவார்கள்.

'அமீபியாசிஸ்' எனப்படும் கிருமித்தொல்லை நோயால் வயிற்றுக் கோளாறு அடைபவர்கள் வாய் விளங்கத்தையும், கருஞ்சீரகத்தையும், சுண்டைக்காய், பாகற்காய், முருங்கை விதை ஆகியவற்றை மாற்றி மாற்றிப் பயன்படுத்திவர 3 முதல் 6 மாதத்திற்குள் பூச்சித் தொல்லையிலிருந்து நிரந்தர நிவாரணம் பெறலாம்.

'வாய்விளங்கம்' என்றால் 'வயிற்றுப் பூச்சிக்கொல்லி மருந்து' என்பதை நினைவில் கொண்டு அவ்வப்போது பயன் படுத்தி வாருங்கள்.

நகர மக்களின் மிகப்பெரிய பிரச்னையான வயிற்றுப் பூச்சி நோய்க்கு 'வாய் விளங்கம்' நன்மருந்தாகும் என்பதை அனுபவத்தில் உணரலாம்.

'பாண்டுதட்டம் குன்மம் பருந்தூலநோய் வாதந்
தீண்டு திரிவிடஞ் சிரந்துண்டம்—பூண்டமடி
நோய் விளங்கக் காட்டாத நுண்கிருமி யாசனப்புண்
வாய்விளங்கங் காட்ட விடுமால்' – (குணபாடம்)

ஓலைச் சுவடிகளிலிருந்து

(மருத்துவர்களின் ஆய்வுக்கு மட்டும் உரியது)

— க. வேங்கடேசன்

சீதபேதி நிற்க

அத்திக் காயை வேக வைத்து அதன் சாற்றினை 100 மில்லி எடுத்து அதில் மிளகு சிறிது போட்டு 1 ஸ்பூன் பசு வெண்ணை கலந்து காலை, மாலை இருவேளை உண்டுவர, 2 (அ) 3 நாளில் சீதபேதி தீரும். மாதுளம்பழம், மங்குஸ்தான் பழம், இளநீர், மோர் சாதம், எலுமிச்சம் சாதம் மட்டும் உணவாகக் கொள்ளவும்.

மாத விலக்கின் போது வரும் வயிற்றுவலி நிற்க

மலை வேம்புச்சாறு
பச்சை மஞ்சள் சாறு
நல்லெண்ணை

இம்மூன்றையும்-வகைக்கு 10 மில்லி அளவு எடுத்து காலை வேளை மட்டும் 3 நாள் பருகிவர, மாதவிலக்கின் போது வரும் வயிற்றுவலி நிற்கும். கருப்பை கோளாறு காரணமாக கருத்தரிப்பது தடையாகி இருப்பின் இம்முறையைத் தொடர்ந்து 3 முதல் 6 மாதம் வரை ஒவ்வொரு மாதமும் மாதவிலக்கு வரும் மூன்று நாளும் சாப்பிட்டுவர, கருப்பைக் குற்றம் நீங்கி, கரு அமையும்.

நகச்சுற்றுக்கு

இலந்தை இலை, மருதாணி இலை, பூசு மஞ்சள் இவற்றை எலுமிச்சைம்பழச்சாறு விட்டு அரைத்து நகச் சுற்றின் மீது பூசி வர, வலி குறைந்து வீக்கம் கரையும்.

பூனை கடி நஞ்சு முறிய

குப்பைமேனி இலை (அ) வேரின் பட்டையை அரைத்து கழற்சிக்காய் (அ) நெல்லிக்காய் அளவு காலை, மாலை இருவேளை 3 நாள் வெந்நீரில் அருந்தவும்.



சித்தர்கள் அருளிய சிடுகோ மருந்து

வாதக் காய்ச்சலுக்குக் குடிநீர்

மிளகு, சுக்கு, வாய்விளங்கம், சீந்தில் வகைக்கு 100 கிராம் அதிமதுரம் 50 கிராம் இவற்றைப் பொடி செய்து வைத்துக் கொண்டு காலை, மாலை இரு வேளை காப்பி டிகாக்ஷன் போல் குடிநீர் செய்து தேன் கலந்து பருகிவர 3 முதல் 5 நாட்களில் வாதக் காய்ச்சல் நீங்கும்,

மேக வெள்ளை, வெட்டைக்கு

தவருன நடத்தை காரணமாக வரும் மேக வெள்ளை, வெட்டை நோய் தீர கீழ்க்கண்ட சிகிச்சையை மேற்கொள்ளலாம் :

சந்தனத்தூள்
லவங்கப் பட்டை
கிராம்பு
அதிமதுரம்
கார்போக அரிசி
வெப்பாலை
அருகம்புல் வேர்
சித்தாமூட்டி வேர்
ஏலம்
சோம்பு
நன்னாரி

இவை வகைக்கு 35 கிராம் எடுத்து இடித்துத் தூள்செய்து சலித்து வைத்துக் கொண்டு காலை, மாலை இருவேளை 3 முதல் 5 சிட்டிகை அளவு வெறும் வயிற்றில் ப்சு வெண்ணெயில் குழைத்து உண்ண மேற்குறித்த நோய்கள் விலகும் 7 முதல் 15 நாட்கள் வரை தொடரலாம். உப்பு, புளி, காரம் இரவு கண்விழிப்பு ஆகியன குறைத்து போகம். லாகிரி வ்ஸ்துக்கள், மாமிசம் ஆகியன நீக்கவும்.

கணைச்சூடு, நாவறட்சி நீங்க

ஆடாதோடை இலை; திப்பிலி, கோஷ்டம், வசம்பு, நெல்லிக்காய், மிளகு, சிறுகடுக்காய், முடக்கத்தான், சிறுநாகப்பூ, வல்லாரை இவை யாவும் தனித்தனியே 35 கிரர்ம் அளவு எடுத்து உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து காலை, மாலை இருவேளை பசுவெண்ணெயில் குழைத்து உண்ண கணைச்சூடு, நாவறட்சி, தொண்டை ரணம், குரல் கம்மல், சினுக்கிருமல், புகைஇருமல், மூலச்சூடு ஆகியன விலகும்.

—(தொடரும்)

என்ன செய்யலாம்?

வாய்வு, செரியாமை வராமலிருக்க

- மலச்சிக்கல், குன்மம், மூலநோய் - போன்றவற்றிற்குக் காரண மாக அமைவது வாய்வு அஜீரணமாகும்.
- தினம் காலை வெறும் வயிற்றில் இஞ்சி கஷாயம் செய்து தேன் 1 ஸ்பூன் சேர்த்து பருகுவது குடல் வலிமைக்கு நல்லது. செரி யாமை வராது.
- பகல் உணவில் சுக்கு, கறிவேப்பிலை. சீரகம், மிளகு, பெருங் காயம் இவற்றால் செய்யப்பட்ட சீரணப் பொடியை 2 ஸ்பூன் எடுத்து 1 பிடி சோற்றுடன் பிசைந்து உண்ண வாய்வுக் கோளாறு வராது.
- வாரம் 1 நாள் முடக்கத்தான், மூக்கிரட்டை, சிறுகீரை ஆகிய வற்றை பாசிப் பருப்புடன் சமைத்து உண்ணவும்.
- அன்றாட உணவில் கறிவேப்பிலை துவையல், பூண்டு ரசம், காரட், வெங்காயப் பச்சடி சேர்ப்பது பயனாகும்.
- நாரத்தம்பழம், எலுமிச்சை, மாங்காய் இஞ்சி ஊறுகாய் வகை களையும் அன்றாடம் உணவில் சேர்ப்பது செரியாமை வராமல் இருக்க உதவும்.
- உணவு உண்டபின் சிறுநடை மேற்கொள்ள வேண்டும்.
- வாரம் 1 முறை வாழைப்பழ வில்லைகள் நான்கைந்து எடுத்து இடையில் 2 முதல் 3 சிட்டிகை பெருங்காயத்தூள் வைத்து விழுங்குவது வாய்வு உடம்பில் தங்காது வெளியேற உதவும்.
- தினம் குறைந்தது 10 டம்ளர் தண்ணீர் அருந்தவும்.
- ஒரே இடத்தில் பலமணி நேரம் உட்காராமல் 2 மணிக்கொரு தரம் நடப்பது நல்லது.
- காலையில் வெறும் வயிற்றில் காபி, டீ பருகவேண்டாம்.
- அதிக அளவில் மாமிசம், காரம், மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, இனிப்பு உண்ண வேண்டாம்.

—ருக்மணி வேங்கடேசன்

நோயும் மருந்தும்

கேள்வி - பதில்

கேள்வி: குமுதம் இதழில் தாங்கள் எக்ஸ்-ரே பற்றிய குறிப்புக்கு ஆதாரம் கேட்டிருந்தாரே டாக்டர் மனோகர், ஏன் அதற்குப் பதில் தரவில்லை?

பதில். மறுநாளே ஆதாரத்திற்குரிய குறிப்பினை 'குமுதம்' இதழுக்கு அனுப்பி விட்டேன். தங்கள் பார்வைக்கும் கீழ்க்கண்டவாறு வெளியிடுகிறேன், சந்தேகம் தெளியும் என்று நம்புகிறேன்.

'Danger of Radiation' : Dr. Karl Z. Margan - one of the studies in pioneers in radiation research warned the animals have proved x-ray exposure of the fetus can produce birth defects, inspaired vision and mental retardation. Extreme doses can be fatal.

The cited studies indicated the number of death from Leukemia and other cancers around 40 percent higher among children whose mother had diagnostic x-ray treatments when they were pregnant.

Another researcher H. Bently Glass, a geneticist of John Hopkins university reports that among the harmful mutations caused by radiations are mongoloid by idiocy and sexual mal development. Any amount of ionising radiation he warned, increases the risk of harmful mutations.

கேள்வி: என்னுடைய தம்பி புற்று நோயால் அவதிப்படு கிறார். சுமார் ஒரு ஆண்டாக வெளியில் தெரிய ஆரம்பித்து அதிலிருந்து சென்னை, வேலூர் போன்ற இடங்களில் ஆபரேஷன் செய்தும் ரேடியேஷன் 3000 யூனிட் கொடுத்தும் குறைவில்லை. கன்னப்புற்று, பரவி இப்போது துவாரம் உண்டாகிவிட்டது. ஆப்ரேஷன், ரேடியேஷன் இவைகளினால் வாய் அதிகம் திறக்க முடியாது. திரவ ஆகாரம். வயது 52 நடமாடுகிறார். ஓரளவு தெம்பாக உள்ளார். ஆங்கில வைத்தியர் கள் கைவிட்டு விட்டார்கள். தங்கள் குமுதம் பேட்டி யில் கூறியுள்ளதைப் படித்து 'சென்னை அரும்பாக்கம் சித்த வைத்திய மருத்துவ ஆராய்ச்சி மையத்தில்' சென்ற வாரம் சேர்த்துள்ளேன்.

அவர்கள் 'சௌக்ரியம் செய்து விடுவோம் துவாரம் தடைபட நாளாகும்' என்று கூறுகிறார்கள் தங்கள் ஆலோசனை ஏதேனும் கூறினால் அல்லது நல்ல மருந்துகள் இருந்தால் தெரிவிக்க வேண்டு கிறேன்.

பதில்: அன்புடையீர், தாங்கள் தற்போது மேற்கொண்டுள்ள சிகிச்சையே போதுமானது தாங்கள் சேர்ந்துள்ள அரும் பாக்கம் சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தில் கன்னப் புற்று நோய்க்கு முழு நிவாரணம் அளிக்கும் தரமான சிகிச் சையை டாக்டர் வேலுச்சாமி அவர்கள் தலைமையில் இயங்கும் டாக்டர்கள் அளித்து வருகிறார்கள். மூன்று மாதத்திற்குமுன் மதுரையில் இப்படித்தான் ஆங்கில மருத்துவர் கைவிட்ட கன்னப்புற்று நோயாளி என்னிடம் வந்தார். இன்னும் ஒரு மாதம் தாமதம் செய்திருந்தால் மரண வாசலுக்குத்தான் சென்றிருப்பார். என் ஆலோசனையின் பேரில் அரும்பாக்கம் மருத்துவ ஆராய்ச்சி மனையில் டாக்டர் வேலுச்சாமி சிகிச்சை அளித்து கன்னப்புற்று குணமாகி வீடு திரும்பினார். தற்போது நலமாகி வாழ்ந்து வருகின்றார். எனவே, தைரியமாகத் தொடர்ந்து அங்கேயே தங்கி சிகிச்சை பெற்று நலன் பெறவும்

கேள்வி: குமுதம் இதழில் 'மஞ்சள் காமாலை'க்கு சென்னையில் சிகிச்சை அளிப்பதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதன் விவரம் கூறவும்.

பதில்: மத்திய அரசின் சார்பில் சென்னை அரும்பாக்கம், அண்ணா சித்த மருத்துவ மனைக்குப் பக்கத்தில் 'சித்த மருத்து மைய ஆராய்ச்சி நிலையம்' ஒன்று கடந்த 10 ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. திறமை வாய்ந்த இளம் சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்களான டாக்டர் வேலுச்சாமி, டாக்டர் சுந்தரம் போன்றவர்களின் நேரடிப் பார்வையில், புகழ் பெற்ற டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம், ஜே. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மேற்பார்வையிலும் இங்கு மஞ்சள் காமாலை, கன்னப்புற்று நோய், மேகப்படை, நீரிழிவு, வெண்மேகம் ஆகிய நோய்களுக்குத் தரமான சித்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகின்றது. சில நோயாளிகளுக்கு தங்கி சிகிச்சை பெற இலவச மருத்துவம், உணவு ஆகியனவும் வழங்கப்படுகின்றன. மேற்கண்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டகண்ட இடங்களில் சென்று தாறுமாறான சிகிச்சை பெற்று நோய் முற்றி துன்பம் அடையாமல் ஆரம்பத்திலேயே மேற்கண்ட மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெற்றால் பூரண நலம்பெறலாம்.

கேள்வி: 'குமுதம்' இதழில் சித்த மருத்துவத்துக்காக இவ்வளவு வாதாடுகின்றீர்களே! இதுவரை ஆங்கில மருந்துகளை நீங்கள் பயன்படுத்தாமலா இருந்திருப்பீர்கள்.

பதில்: நல்லது நண்பரே! ஆண்டவன் கருணையால் எனக்கு கடந்த 35 ஆண்டுகளில் தீவிரமான நோய் ஏதும் வரவில்லை. கடுமையான அலைச்சல், வேலைப்பளு காரணமாக எனக்கு மாதம் ஒரிரு முறை தலைவலி (அ) உடம்புவலி மட்டுமே வருவதுண்டு. அப்போது ஓய்வு எடுத்துக் கொள்வேன், தாங்க முடியாத வலி இருப்பின் 'வலி நிவாரணியாக' ஒரு மாத்திரை மட்டும் சாப்பிடுவதுண்டு. நான் சித்த மருத்துவத்திற்காக வாதாடுவது அதன் மேன்மையை உணர்த்தவே அன்றி, நவீன மருத்துவத்தைப் பழிப்பதற்காக அல்ல. எல்லா மருத்துவ முறைகளிலும் நன்மை, தீமை கலந்திருக்கும்; அதற்காக நவீன மருத்துவம் உயர்ந்தது; சித்த மருத்துவம் உபயோக மற்றது என்பதைத்தான் மறுக்கிறேனே தவிர; என்னைப் பொறுத்தவரை நவீன மருத்துவத்தின் உண்மையான திறனை எப்போதும் போற்றுவேன்! தலைவணங்கி ஏற்கிறேன். என்னுடைய கணிப்பில் நவீன மருத்துவம், நோயைக் கணிப்பதில் துல்லியமானது; அறுவை சிகிச்சையில் அபார சாதனை கொண்டுள்ளது. ஆனால் அதன் மருந்துகள் என்று பார்க்கும் போது சித்த மருந்துகளுக்கு இணையாகப்போதிய வளர்ச்சி பெறவில்லை என்பதே என் வாதம்.

அட்டைப்படக் கட்டுரை :


வலிப்பு நோயைப் போக்கும் சடாமாஞ்சில்

க. வே.

சில ஆண்டுகட்கு முன்னர் சென்னையில் சுமார் 23 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் ஆலோசனைக்காக வந்திருந்தார். பி.காம் படிப்பினை முடித்து விட்டு சி.ஏ. படிப்பினைத் தொடரும் அந்த இளைஞர்க்கு 'வலிப்பு நோய்' அடிக்கடி வரும். அதன்காரணமாகப் படிப்பைத்தொடர முடியவில்லை; இதற்கு ஆங்கில மருந்துகள் ஆண்டுக்கணக்கில் சாப்பிட்டும் பலன் தரவில்லை என்றும் 'மூலிகை சிகிச்சை' தரவேண்டும் என்று கேட்டார்.

அவருக்காகப் பல்வேறு நூல்களை ஆராய்ந்து கடைசியில் 'சடாமாஞ்சி' எனும் அட்டைப்பட மூலிகையை அவருக்கு கஷாயம் போட்டு 20 முதல் 40 நாட்கள் காலை, மாலை அருந்திவருமாறு கூறினேன். முயற்சியுடன் அந்த இளைஞர் செய்தார். ஒரு மாதம் கழித்துவந்து, தற்போது பாதியளவு தொல்லை குறைந்துள்ளதாகக் கூறினார். அதன்பின் முருங்கைக்கீரை, கறிவேப்பிலை, தூதுவளை, வல்லாரை ஆகிய மூலிகைகளை மேலும் 2 மாதம் பின்பற்றும்படி கூறினேன். அவ்வாறே அவற்றைப் பக்குவமுடன் சாப்பிட்டு முக்கால் பங்கு நிவாரணம் பெற்றதாகக் கூறியது—'சடாமாஞ்சில்' மூலிகையின் மருத்துவக் குணத்திற்குச் சான்றாயிற்று, அதன்பின் 'வலிப்பு நோயாளிகள்' பலருக்கும் 'சடாமாஞ்சில்' கஷாயம் கொடுத்ததில் ஆங்கில மருந்துகளால் கிட்டாத குணம் இதனால் கிடைத்தது. எனவே நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும் 'சடாமாஞ்சிலை' வலிப்பு நோயாளர்கள் காலை, மாலை கஷாயம் செய்து பருகிவர நோய் கட்டுப்படுகிறது. படிப்படியே குணமாகிறது.

சென்ற இதழ்த் தொடர்ச்சி



மூலிகை மருத்துவ ஆராய்ச்சி அனுபவங்கள்

க. வேங்கடேசன்

நுரையீரல் பாதுகாப்பு வழிகளும் நோயுற்றுல் தீர்க்கும் முறைகளும்


உள் நுழையும் குளிர்ந்த காற்றை இரத்த ஓட்டம் (சளி சவ்வின்மேல் பாயும்) வெப்பப்படுத்தும் : சளி சவ்விஞல் சுரக்கப்படும் சளி, வெப்பம் மிகுந்த காற்றை குளிர்ச்சி செய்யும். உயிர் வாழ காற்று தேவை என்ற போதிலும் அது சுத்தமாகவும், ஆரோக்கியமான நிலையிலும் இருந்தால் தான் அது நன்மை பயக்கும்.

மூக்கைத் தாண்டிச் சென்ற சுத்தமான காற்று தொண்டைக்குழியை அடையும். இங்கு முக்கியமாக இரண்டு குழாய்கள் உண்டு. ஒன்று உணவு செல்லும் குழாய் - அன்னக்குழல். மற்றென்று காற்றுசெல்லும் குழாய்-காற்றுக் குழல். 'குரல்வளைமூடி' என்ற அமைப்பு - உணவைக் காற்றுக் குழலுக்குள் செல்லாதபடி தடுக்கும். அம்மாதிரி தவறி சென்றுவிடுவதால்தான் 'புரை' ஏறும்.

தொண்டைக் குழியையடுத்து குரல்வளை இருக்கிறது. இதிலிருந்துதான் 'குரல்' உண்டாகிறது. எனினும் காற்று செல்லும் ஒரு முக்கியமான பாதையாகவும் இது விளங்குகிறது. தொண்டைக் குழிக்கும் காற்றுக் குழிக்கும் இடையில் இது அமைந்துள்ளது. இதில் இரு குரல்நாண்கள் உண்டு. இவை சுருங்கி விரிவதால் நடுவிலுள்ள இடைவெளி அல்லது சந்து குறுகும், அல்லது பெரிதாகும். அப்பொழுது இதன் வழியே செல்லும் காற்றிற்கேற்றூர்போல்

ஒலியின் தன்மை-ஸ்தாயி, தீவிரம் மாறுபடும். குழிவுள்ள நாசி அறைகளும், மண்டை ஓட்டு எலும்புகளும் 'ஒலி' உண்டாவதில் பங்கு கொள்கின்றன.

வெளிமூச்சு, உள்மூச்சைக் காட்டும் படம்



வலது படம் :-வெளிமூச்சு விடும்பொழுது மார்பறையின் நிலையைக் காட்டும் படம். உதர விதானம் நகரும் திசையை அம்புக்குறி காட்டுகிறது;

இடது படம் :-உள்மூச்சு இழுக்கும்பொழுதுமார்பு அறையின் நிலையைக் காட்டும் படம். உதர விதானம் நகரும் திசையை அம்புக்குறி காட்டுகிறது.

மூச்சுக்குழல் (அல்லது) காற்றுக்குழல் (சுமார் 5 அங்குலம் நீளமுள்ள குழாய்) குரல்வளையில் தொடங்கி மார்பறையின் நடுப்பகுதியில் இரண்டு கிளைகளாகப் பிரியும். 'C' வடிவமுள்ள குருத்தெலும்புகளால் ஆனது. ஆகவே வெளிக்காற்று உட்புக, எப்பொழுதும் இந்தக்குழல் திறந்தே இருக்கும். எனவே, காற்று உட்செல்லவும், வெளியேற்றவும் இது பிரதான பாதையாக அமைத்துள்ளது.

மூச்சுக் கிளைக்குழல்கள் (இரண்டு) ஒவ்வொன்றும் ஒவ்வொரு நுரையீரலுக்குச் செல்லும். இக்குழல்கள் மேன்மேலும் கிளைத்துக் கொண்டேபோய் நுரையீரல்களை அடையும். ஒரு மரத்தின் கிளைகள் பிரிந்து செல்வதுபோல் கிளைகள் காணப்படும். கடைசியில் நுனியில் ஒரு பலூன் அல்லது திராட்சைக் குலைபோன்ற அமைப்பாக முடிவடையும். இங்குதான் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய காற்றறைகள் இருக்கும். ஒரு காற்றறையில் இரண்டு மெல்லிய சுவர்களும், இடையே உட்குழிவாகவும் காணப்படும். இக்காற்றறைகள் எல்லாம் திசுக்களால் இணைக்கப்பட்டு இருக்கும். இதுதான் 'நுரையீரல்' எனப்படும்;

பக்கத்திற்கு ஒன்றாக (வலது, இடது) இரண்டு நுரையீரல்கள் மார்பறையின் பெரும் பகுதியை அடைத்துக்கொள்கிறது. ஏறக்குறைய முக்கோண வடிவத்திலுள்ளன. ஒரு முனை கூர்மையாகவும் (மேல்முனை), கீழ்முனை அகலமாகவும் இருக்கும். இக்கீழ் முனைகள் மார்பறையையும் அடி வயிற்றறையும் பிரிக்கும் தசைச் சுவற்றின்மேல் பொருந்தியிருக்கும். இவ்விரு நுரையீரல்களுக்கிடையில்தான் இதயம் உள்ளது. வலது நுரையீரலில் மூன்று மடிப்புகளும், இடது நுரையீரலில் இரு மடிப்புகளும் இருக்கும். இம்மடிப்புகளில்தான் கோடிக்கணக்கான காற்றறைகளும், அவற்றில் பாயும் மயிரிழை போன்ற இரத்தக் குழாய்களும் காணப்படும், இந்த நுண்ணிய ரத்தக் குழாய்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நுரையீரலில் தமனியாக மாறும். இந்தக் காற்றறையின் சுவர்களும், மயிரிழைக் குழாய்களின் சுவர்களும் மிகவும் மெல்லியதாக இருப்பதால், வாயுமாற்றம் (பிராணவாயு உட்செல்லவும், கரியமிலவாயு வெளிச்செல்லவும்) ஏற்பட அனுகூலமாக இருக்கிறது.

நுரையீரல்களின்மேல் இரண்டு உறைகள் இருக்கும். இவற்றிற்கு 'ப்ளூரா' என்று பெயர். இவை பழுதுபடுவதால் 'ப்ளூரிஸி' என்ற நோய் ஏற்பட ஏதுவாகிறது என்று கூறப்படுகிறது.

உள்மூச்சு ஏற்படும்பொழுது உதரவிதானம், தட்டை யாக் மாறும். விலா எலும்புகள் உயர்த்தப்படும். மார்பு எலும்பு முன்னேக்கித் தள்ளப்படும். அதனுல் மார்பறை நாலா பக்கங்களிலும் பெரிதாகிறது. கனஅளவு அதிகமாவ தால் வெளிக்காற்று உள்ளிழுக்கப்பட்டு நுரையீரல்களே அடையும். அங்கு வாயுமாற்றம் ஏற்பட்டு இரத்தம் சுத்த மடைகிறது அசுத்தங்கள் நீக்கப்படுகிறது.

இதையடுத்து வெளிமூச்சு நிகழும். முன் நிகழ்ந்த மாற்றங்கள் எதிர்முறையில் நடைபெறுவதால் மார்பறை சுருங்கி விலா எலும்புகள் பழைய நிலேயை அடைந்து உதர விதானம் மறுபடியும் வில்போல் மாறிவிடும். அம்மாதிரி மார்பறையின் கனஅளவு குறைவதால், அசுத்தக் காற்று வெளியேற்றப்படுகிறது.

பிராணவாயு நுரையீரலிலுள்ள நுண்ணிய அறைச் சுவர்களில் ஓடும் இரத்தத்துடன் கலந்து அதை ஆழ்ந்த சிவப்பு நிறமாக மாற்றும். கரியமிலவாயு கலந்த ரத்தம் நீலம் கலந்த சிவப்பு நிறம். இவ்வாறு ரத்தத்தின் நிறம் மாறிவரக் காரணம் நாம் சுவாசிக்கும் காற்றிலுள்ள பிராண வாயு இரத்தத்திலுள்ள அயச்சத்துக்களால் கிரகிக்கப்படு வதுதான் என்று நம்பப்படுகிறது.

சாதாரணமாக ஒரு நிமிடத்தில் இந்த சுவாசித்தல் 18 அல்லது 20 தடவைகள் நடைபெறும். சிலசமயங்களில் இது சற்று துரிதமாகவோ அல்லது நிதானமாகவோ நடை பெறும். உதாரணமாக அதிக வேலேயின் காரணமாகவோ அல்லது தசைகள் சற்று மும்முரமாக வேலே செய்வதாலோ அப்பாகங்களுக்கு அதிக பிராணவாயு தேவைப்படும். அதே சமயத்தில் அதிக் அளவில் கரியமிலவாயு தோன்றும். இந்த அதிக அளவிலுள்ள கரியமிலவாயு இரத்த ஓட்டத்தில் கலந்து சுவாச உறுப்புக்களுக்கு உணர்ச்சியும், ஊக்கமும் கொடுக்கும். அப்பொழுது நாம் சற்று விரைவாகவே சுவாசிக்க நேரிடும்.

(தொடரும்)

'சிவயநம'

—நி. மெய்யப்ப சுவாமி அவர்கள்

முன்கட்டுரையில் கூறியுள்ள சிவயநம எனுஞ்சொற்றொடரான அக்ஷரங்கள் ஐந்திற்கும் என்னால் சரியான விளக்கம் முழுமையாகக் கூறத்தகுதி எனக்கில்லை. ஆனாலும் ஒருவாறு உணர்ந்தவரைக் கூறு கிறேன். குறைகளிருக்கத்தான் செய்யும். குறைகள் இருக்கவேண்டு மென்பது எனது எண்ணமல்ல. குறையும், நிறையுங்காண்பது வாசக அன்பர்களினுரிமை. முன் 19-வது கட்டுரையில் கூறியுள்ள அகஸ்த்தியர் பூரணச் சந்திரோதய வாலைபாடல் 200-ல்

''செப்பிய மந்திரம் சிவயநமவென
இப்புவிமீது இருந்த திரவியம்
வைப்பது கோணம் வகைசொன்னேன் பாரு
கைப்பிள்ளை வாலை காமவிந்தாமே......என்கிறார்

வாலை எனும் காமவிந்தான வஸ்த்துவின் கலைகளையுணர்ந்த பின் செய்பாகத்தால் முப்புகுருவாக முடிக்கப்பெற்றால் அதற்கு (அவ் வஸ்துவிற்கு) கணபதி எனப்பெயர். கணபதி என்பதில் ஐந்து வகையான வஸ்துக்கள் ஒன்றுகூடினால்தான் நிறை அடுக்கின்படி ''சிவயநம'' என்னும் ரகசிய அக்ஷரக் குறியீடான வைப்பு (புதையல்) திரவியம் கிடைக்கும். சிவயநம எனும் சொற்கள் வெறுஞ்சொற் களேயல்ல. சிவயநம எனுஞ்சொற்களுக்கு ஐந்து பொருள்களுண்டு என்பது நிச்சயமான உண்மை. இவ்விதமான ஐத்து வஸ்துவைக் காண, அடையமுடியாத அவ்வஸ்துக்களின் ரகசிய எழுத்துக்களை வரிசைப்படுத்தி சொற்றொடரான பெயரைக் கூறிக்கொண்டிருப்பின் அதனால் நாம் அடையப்போகும் பயன்......? ராமேஸ்வரம் என்ற ஊருக்குச் சென்றால்தான் அங்குள்ளவைகளைக் கண்டும், உண்டும், ரசித்தும் களிக்கலாம். அதை தவிர்த்து ஓரிடத்திலமர்ந்து கண்களை மூடிக்கொண்டு ராமேஸ்வரம் எனக் கூறிக்கொண்டிருந் தால் ராமேஸ்வரம் நம்முன் வருமா? அங்குள்ளவைகளைக் கண்டும் அனுபவிக்கவும் இயலுமா? இவ்வாறு நான் கூறுவதாக எண்ண வேண்டாம். அகத்தியர் பரிபாஷைத்திரட்டு 500-ல்

''காதமது நடந்தாலல்லோ வழி துலையும்
கண்மூடி இருந்து விட்டால் நடந்ததெங்கே? ......என்கிறார்

எனவே சிவயநம'' வெனும் ஐந்தக்ஷரங்களும் ஓர் வஸ்த்துதான் ஐந்தல்ல ஆனால்ஒன்றுதான்; ஐந்து ஐத்துதானென்று. இவ்வாறே

சித்து நூல்களிலும் ஒன்றுதான் மூன்று என்றும் மூன்றும் ஒன்றுதான் என்றுங்கூறப்படுகிறது. உண்மையுமதுவே...;கடல்நீர் ஒன்றுதான்; அதைப் பாகப்படுத்தினுல் இரண்டாகிறது. சித்தர்கள் கூறியுள்ள கடலும், கடலில் விளையும் உப்பும் உப்பல்ல. சித்தர்கள் கூறியுள்ள கடல் என்பதே நாதம், நாதமெனுங் கடலில் விளையும் விந்துவாகிய வஸ்த்துதான் உப்பு. இந்த உண்மையான உப்புதான் அப்பு. உப்பு (அப்புவினுள் உப்பு) இந்த உப்பைத்தான் சித்தர்கள் ஞானிகள் முதல் உயர் உலோகஞ்செய்ய முயற்சிக்கும் வாதிகள் வரை தேடி அலைவதும்; வணங்கிக் கொண்டாடுவதுமாகும், இந்த "சி.காரம், வ காரம் ய.காரம் மூன்றும் அப்பூவில் (நீரில்) உள்ளத் தீக்கலைகளாகும். அப்பு தீ, தேய்வு தீ, வாய்வு தீ, ஆக மூன்றும் முத்தீ, இம்மூன்று தீயும் கன்னிப்பெண்ணின் நாதவஸ்த்துவினுள் இருந்தது (இந்நாதம் கலைகள் குறைந்தது, சுயநாதம் இருப்பிடம் வேறு. "சிவவாக்கியர் பாடலில் ....

வன்னிமூன்று தீயினில் வாழுமெங்கள் நாதனும்
கன்னியானதுள்ளிருக்கக் காதல்கொண்டதெவ்விடம்...

என்கிருர்; நிற்க 16 கலைகளையுடைய முப்பூதீ எனப்பெயர். இதன் விபரம் வகார நீர் அப்பு கலைகள் 10, சிகாரம் தீக்கலைகள் 6 ஆக 16 கலைகளும் அக்கினி 'அப்பு' தீ எனப்பெயர், இம்முத்தீயின் விவரமாவது அப்புதீ பந்தபாசத்தை அழிக்கும் வாயுவு தீ ஆணவகாமியத்தை அழிக்கும் தேய்வு தீ யாவுஞ்சேர்ந்த (இச்சாசத்தி, கிரியா சத்தி, மாயா சத்தி) மும்மலத்தையழிக்கும். இந்த முப்பூவில் (அப்புதீயில்) பிரமா, விஷ்ணு, ருத்திரன் எனும் மூவரினம்ஸமாகும். திருவள்ளுவர் பஞ்சரத்தினம் 500-ல்..."யகாரமே முப்பூவினடைவு மாச்சு யரிமாலீசன்" என்கிறர். அப்பு தீ, வாயு தீ, தேய்வு தீ, மூன்றிற்குஞ்சான்று, பட்டினத்தார் தன் தாயைத்தகனகிரியை செய்யப் பாடியப்பாடல் :

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க மூள்கவே,........என்கிருர்,

முன்னையிட்ட தீ முப்புரத்திலே என்பது தேய்வு தீ புராண நூல்களில் கூறப்படும்முப்புரமென்பது முப்புராதிகளைச்சிவன் சிரித்து அழித்ததாக கூறப்பட்டுள்ளது. மும்மலமெனும் முப்புரத்தை சிவம் எனும் அகார வஸ்த்துவில்தோன்றிய (அமைந்த) தீயழித்தது, முப்புரமென்பது மும்மல காரியந்தான் என்பதற்குச் சான்று. திருமூலர் திருமந்திரம் 8000-ல் பதிவலியில் வீரட்டமெட்டு எனுந்தலைப்பில் 5-வது பாடலில்

"அப்பணி செஞ்சடையாதி புராதனன்
முப்புரஞ் செற்றனனென்பகண் மூடர்கண்
முப்புரமாவது மும்மலகாரிய
மப்புரமெய்தமை யாறறிவாரே......என்கிறர்.

எனவே மும்மலமெனும் முப்புரத்தையழித்தது தேய்வு தீ....,.... அடுத்து தென்னிலங்கையை அழித்து வாயுவு தீ, வாயுவில் பிறந்த (வாயுவு குமாரன்) தீயே அனுமான், அனுமான் உடலில் வாயுகலை களானரோமமும் முகம் மட்டும் செந்நி றமாக (வாயு தடு மட்டம்) அமைந்தவாயு குமாரனெனுத்தீயால் தென்னிலங்கை எனும் ஆணவ காமியமழிந்தது எனவே ஆணவகாமியத்தை யழித்தது வாயுவு தீ, அடுத்து அப்பு தீ பட்டினத் தடிகள் தாயிறந்தபின் தன் தாயை வாழைத் தண்டை அடுக்கி அதன்மேல் வைத்து முன்பாடலைப் பாடி யதும் சிதை தீப்பற்றி எறிந்தது எனக்கூறப்படுகிறது. எனவே வாழைத் தண்டில் சரீரம் (நீர்) உள்ளது எனவே தாய் எனும் பந்த பாசத்தையழித்தது அப்பு தீ ஆகவே........மும்மலங்களை அழித்தது தேய்வு தீ அகரம்........ஆணவகாமியங்களை யழித்தது வாயுவு தீ ஓ காரம் ....பந்தபாசத்தை அழித்தது அப்பு தீ........ய. காரம். விநுயகர் மூலம், விநாயகர் என்பதே இவ்வாறமையும் வஸ்த்துவிற்கு தான் பெயர் என்பதற்கு சான்று அகஸ்த்தியர் பூரணச் சந்திரோ தயவாலை 200-ல் 41-வது பாடலில்.........

41 விந்தல்லோத் தோற்றமெழு வகைவேலை
செந்தல்லோவிந்து சீவனுமாச்சு
இந்தல்லோ ராத்திரியிருட்டும் வெளிச்சமும்
விந்தில்லாதில்லை விநுயகர்மூலமே........என்கிறர்.

எனவே விநுயகரினுருவமைப்பு முப்பூவின் கலை களின் அமைப்பினுண்மையை உணர்த்தும் உவமானமாகும். வடலூர் ராமலிங்க சுவாமிகள் ஆறுந் திருமுறைவசன பாகத்தில் 78-வது தலைப்பின் புராணங்களின் உண்மையென்பதில் கணபதி, சுப்பிரமணிய சுாவமிகளுந் தத்துவங்களே தவிர வேறல்ல என்கிறர் கள். எனவே பற்பல உண்மைகளுவமானமாகவும், வைதீகச்சடங்கு களாகவும் மக்களிடையே ஏன் இந்துக்களிடையே முக்கியத்துவம் பெற்று இன்றுவரை நடைமுறையிலுள்ள உவமானத்தினுண்மையை உதாரணத்திற்த ஒன்றை மட்டுங் கூறுகிறேன் இந்துக்களின் திருமணத்தில் திருமணப் பெண்ணிற்குத் திருமாங்கல்யமெனும் ஆபரணத்தை மஞ்சள் நூலில் கோர்தது மணப்பெண்ணின் கழுத்தில் மணமகனுல் கட்டப்படுகிறது. திருமாங்கல்யத்தைக் கருப்பு. சிகப்பு, வெள்ளை போல்த நூல்களில் கோர்ததுக் கட்டக்கூடாதா. ஏன்? மணப்பெண் கழுத்தில் திருமாங்கல்யங்கோர்த்த மஞ்சள் நூல் கட்டு

கிருர்கள்: மஞ்சள் நூல் கட்டிய மணமகனுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நடைமுறை அப்பெண்ணின் கடமையாக அமைந்து விடுகிறது. மஞ்சள் நூலின் மகிமை, விபரம் எவ்வாறெனில் முன் கூறிய கட்டுரையின்படி ஆணுள் பெண், பெண்ணுள் ஆண் (சிவத் துள்சத்தி, சத்தியுள் சிவம்) என அறிகிருேம். எனவே ஆண்களிடம் வாயுவுக் கலைகளான சத்தியாகிய நாதமிருக்கிறது, இதனின் நிறம் மஞ்சள், அதே நாதமாகிய மஞ்சள் நிறவஸ்த்து ஆணினத்தில் இருப்பதால் ஆண் அடையாளக் குறியீடாக மஞ்சள் நிறக்கயிறு பெண்ணின் கழுத்தில் கட்டுவிக்கப்படுகிறது. பெண்களுக்கு ஆண் களின் வஸ்த்துக் குறியீடான மஞ்சள், குங்குமம், புஷ்பம், பொன் ஆபரணங்கள் முதலியவை பெண்கள் அணிவது. ஆனுல், அதே பெண் கணவனை இழந்தால் ஆணின் நாதமாகிய வாயுவுக்கலை களான தலைமுடி. மஞ்சள், குங்குமம், புஷ்பம். திருமாங்கல்யக் கயிறும் நீக்கப்பட்டு, பெண்ணினம் சிவம் விந்துவானதால் (வெள்ளை நிறம்) நாதத்துணை (நாதன்) இழந்து சிவமான வெண்ணீறணிவித்து வெண்மைநிற ஆடையும் அணிவதாகும். இன்னும் ஒரு தாய் பிரசவ மாகுமுன் பனிக்குடநீர் உடைந்த பின்தான் குழந்தைப்பிரசவமாகிறது வேதிக்கவேண்டிய வஸ்த்துவும். குடமுடைந்த தீ வஸ்த்துவினுல் வேதிக்கமுடியும். இக்கருத்தை முன்னிட்டே பிறக்கும்போது குடம் உடைந்துதான் பிறக்கிருேம், இறந்தபின் இடுகாட்டில் குடமுடைத்து தான் கொள்ளி வைக்கிருேம் இதற்குச் சான்று "மச்சமுனி கருமான முப்பு 20-ல் 8-வது பாடலில்........

நயனமென்னக் குடமுடைத்துக் கொள்ளிவைக்க
நன்ருகத் தீ முகத்தில் வேதை வேதை........என்கிருர்

ஆனதால்ஒரு தாயின் 10மாதமுடிந்தக் கெற்பக்குட நீர்; குட நீருமல்ல தீ தீயுமல்ல, இதற்குச் சான்று அகஸ்த்தியர் மதிவெண்பா 100-ல், 78—82 வது பாடலில்.......

78.......காணுங்குடத்து நீர் காணுமவனே சித்தன்
தோணுமோவவ்வுலகந் தோணுது—தோணக்கேள்
கன்னிப்பெண்ணுடன் கனத்தமக வீனுமுன்னே
யுன்னியத்தண்ணீ ரெனத்தாஞேது

82.........காணுதுவமிர்தமதுக் கன்னியுடைத்தத் தன்குடத்தை
தூணுகவண்ட பிள்ளையயராதோ—தோணரிது
கெட்டமதியுள்ளவர்க்குக் கிட்டாது கிட்டாது
விட்டகுறைவந் தென்னமேவும்........என்கிருர்.

எனவே புஷ்பவதியாகாதக் கன்னிப்பெண் கர்பந்தரித்து குடநீருடைந்து சிசு பிறக்க வகையில்லை. ஆனால் கன்னிப்பெண் குடநீரென்பது கன்னிப்பெண் கொங்கையுள் நாதகுட நீரில் விந்துவான சிசு வளர்ந்து முன்விபரப்படி 10 மாதஞ்சென்று நாதமெனுங் குடமுடைந்து செந்தீ (செந்நீர்) பிறந்து விந்துவான வஸ்த்துவேதை (சிசு) பிறந்து உந்திக்கமலத்தில் வளர்கிறது. ஆகவே குடம் உடைந்து தெளிந்த சுத்தமான நீரே விந்து. சுத்த கெங்கை அமுரி எனப்பெயர். இந்நீர் துற்குணம், துர்ச்செய்கை உள்ளவர்கட்குக் கிட்டவே கிட்டாது என்கிறார். இவ்வஸ்த்து வேதைப் பிள்ளைவாலை 10 வயது, விநாயகர், மூலம் முலவிந்து முதற்பொருள் ஆதிவிந்து எனக்கூறப்படும் விநாயகரே முதல் தெய்வம். விநாயகரின் உருவ அமைப்பு, தேய்வு தீ, வர்யுவு தீ, அப்பு தீ என்ற கலைகள் குறைந்த அப்பு முப்பு அமைப்பில் தியாகியக் காலே தலையாகவும் (சாகாத்தலை) அப்புவாகிய தலையே காலாகவும் (வேகாக்கால்) அமையலாயற்று. சத்திசிவ அமைப்பில்தான் சாகாக்கால் வேகாத்தலை எனப்பெயர், அகஸ்த்தியர் பரிபாஷைத் திரட்டு 500-ல் 9-வது காண்டம் 45-வது பாடலில்...

தானென்ற பிரமஉப்பு வெளியுமாச்சு
சத்தமிட்ட வங்குசிங்கு தலைகீழாச்சு........என்கிறார்.

எனவே பதினாறு கலைகளைக் கொண்ட விநாயகருக்கு "சிவயநம" என்னும் சொற்றொடரினடுக்கு நம் மானிட சரீரத்திற்கு "நமசிவ்ய" எனும் சொற்றொடரினடுக்கு விநாயகர்க்கு சிகாரம தீயே தலை, மானிட சரீரத்திற்கு ந.காரம் பிருதிவி (மண்) கலையே தலை ஆனதைக் கொண்டே ஞானசித்தர்கள் சமயப் பெரியோர்கள் வரை சிவயநம எனச் சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை என வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். "சிவயநம" எனும் வஸ்த்துவின் அடுக்கின் விபரம் சி.காரம் தீ ஒன்றரை, வ காரம் வாயுவு ஒன்னே கால், ய.காரம் ஆகாயம் ஒன்று, ந.காரம் பிருதிவி முக்கால், ம.காரம் அப்பு அரை, ஆக ஐந்து நம் சரீரம் பஞ்சபூத அடுக்கின் கணிதச் சுருக்கம், ந.காரம் பிருதிவி (மண்) தலை ஒன்றரை. ம.காரம் அப்பு ஒன்னேகால், சி.காரம் தேய்வு ஒன்று. வ,காரம் வாயுவு முக்கால், ய.காரம் ஆகாயம் அரை, ஆக ஐந்து நிற்க விநாயகர்க்கு ஒற்றைக் கொம்பு, சிவனுக்கும் ஒற்றைக்கால் தான். விநாயகரின் தந்தமெனுஞ் சூரியன் கலைகள் 12-ல் ஒடிக்கப்பட்ட (பிரிந்த) கலைகள் நான்கு போக மீதம் கலைகள் எட்டு. எட்டிற்கு அகாரமாகிய தீ உடல். இதற்கு சான்று கடைப்பிள்ளை சிவயோகம 100-ல 7-வது பாடலில்........

விஷஜந்துக்களும் மூலிகைகளும்

[பாம்பு]

—அமரர் மூலிகைமணி கண்ணப்பர்

பாம்பு நெருங்காமல் தடுக்கும் வீட்டு மூலிகை

ஒவ்வொரு வீட்டிலும் இன்னின்ன மூலிகை இருந்தால் விஷம் உள்ள பாம்பு முதலிய உயிரினங்கள் வாராது என்றும், தவறிவந்து கடித்து விட்டாலும் உடனே அம்மூலிகைகளினால் முறித்து ஒழித்துக் கட்டலாம் என்றும் அவைகள் இருத்தல் அவசியம் எனவும் அவை யாவை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கண்டுகொள்வாய் சொல்லுகிறே னுலகோர்க்கெல்லாம்
　　காரமா மூலியடா பங்கம் பாளை
கொண்டுவந் துன்மனையில் வைத்திருந்தால்
　　கொடிவிட மணுகாது குடியோ டிப்போம்
நன்றான நாகதாளிக் கிழங்கு தானும்
　　நன்மனையி லிருக்கவிடம் நாடா தப்பா
ஆன்றான ஆகாசக் கருடன் மூலி
　　அம்மனையி லிருக்கவிட மற்றுப் போமே,

பொருள்: உலகத்தில் வாழும் மனிதர்க்கெல்லாம் ஒன்று சொல்லுகிறேன், அதைக் கேட்பாயாக. பங்கம் பாளை என்னும் ஆடு தின்னுப் பாளையானது மிகவும் காரமான மூலிகையாகும். ஆகையால் அந்த மூலிகையைக் கொண்டுவந்து நம் வீடுகளில் வைத்திருந்தால் கொடிய விடத்தன்மையிள்ள ஜீவராசிகளும் அதனால் உண்டாகும் நஞ்சுக்களும் அணுகாமல் குடியை விட்டு ஓடிப்போய்மாம். அவ்வாறே நாகதாளிக் கிழங்கும், ஆகாசகருடனும் வீட்டிலிருந்தால் அவ்விடத்தில் விடமுள்ள ஜந்துக்கள் வந்து சேராது. ஆகையால் அவைகளை நீங்கள் குடியிருக்குமிடத்தில் வைத்து வளர்க்கலாம்.

விரியன் வகை-16

விரியன் வகை பதினாறு ஆகும். 1, பொரிப்பல் விரியன் 2. பெருவிரியன், 3; இரத்த விரியன் 4. கருவிரியன் 5 செவ்விரியன் 6 செந்தலை விரியன் 7. வெளவால் விரியன் 8 செறியுங்கழுத்துக் கோல் விரியன் 9; தரை விரியன் 10 கண்ணாடி விரியன் 11 கட்டு விரியன் 12, கழுதை விரியன் 13 நிழல் விரியன் 14 குறிஞ்சி விரியன் 15 நெடுங்கழுத்துக் கோல் விரியன் 16 புல் விரியன் என்பன.

விரியன் கடிகளின் பொதுக் குறிகுணம்

குணமென்றால் விரியன்குலம் கடித்த தென்றால்
 குருதிவரும் கடிவ்வாயி விறைச்சி சிந்தும்
கண்ணுடனே காதடைத்து மதி மயங்கிக்
 கனத்துடல் தலைசுற்றிக் களையே காணும்
கண்ணுஞ்சொருகும் விக்கல்வரும் செருக்கு நெஞ்சைக்
 கடிவாயிற் கனவலியாய்க் கடுக்கும் வீங்கும்
எனச்சொல்வே னெரியுமஞ்ச னிறமோ மேனி
 எந்தெந்த விரியனுக்கு மருந்து கேளே.

பொருள்: விரியன் பாம்புகளில் சிறப்பாகச் சொல்லப் பட்டவை போக மற்ற விரியன் பாம்புக் கடியின் பொதுக் குறி குணங்கள்: அவை கடித்த இடத்தில் இரத்தம் ஒழுகல், அங்குள்ள ஊன் கடியுடன் துண்டாய் விழுதல், கண் தெரியாமை, காது கேளாமை, அறிவு மயங்கல், உடல் பளுவாதல்; தலைச்சுற்றல், களைப்பு, கண் சொருகல், விக்கல், நெஞ்சு கரகரத்தல், கடிவாய் மிக வலித்தல், அங்கு கடுத்தல், வீங்கல், எரிதல், உடம்பெல்லாம் மஞ்சள் நிறமாதல் என்பனவாம்

பொரி விரியன் கடிக்கு வேம்புநெய்ப் பூச்சு

மஞ்சள்நிற நீர்பொரியும் கடித்த வாயில்
 மருந்தறியச் சொல்லுகிறேன் பங்கம் பாலை
அஞ்சாமற் சதுரமென்ற கள்ளிப் பாலில்
 அப்பனே யேழுநா ளூரப் போட்டுத்
துஞ்சாம லிடித்ததூள் பலமே யொன்று
 துவரான வேப்பெண்ணெய் படிகா லப்பா
மிஞ்சாமல் மெழுகுபத மாகக் காய்ச்சி
 மிதமாக வவன்சிரசில் பூசிப் போட

சாரணை கலிக்கம், சாரணை ரசம்

பூசப்பா சாரணைவே ராவின் பாலில்
 புனிதமாய் நாளேழு மூற வைத்தே
ஈசமா யுலர்த்தியதை வைத்துக் கொண்டே
 வெலுமிச்சம் பழச்சாற்றிற் கலிக்கம் போடாய்
ஆசையாய்ச் சாரணைவே ரதைக்கு டைந்தங்
 கதிர்சூதங் கழஞ்சு விட்டுச் சாணிமுடி
நீசமாய் நாற்பதுநாள் சென்றே டுத்து
 நிம்பெண்ணெய் படிகாலிற் கழிஞ்ச துண்ணே.

பொருள் : பொரிவிரியன் கடித்த நஞ்சானுல் கடியளவு இருக்கின்ற உடலின் இறைச்சி மிகவும் வீங்கல், உடல் பதைத் சுரங்காய்தல், கண் அடிக்கடி உறங்கல் கடிவாய் கடுத்தல் க மூக்கு இவை நெருப்பு பட்ட எரிவுபோல் எரிதல், மூக்கில் மஞ் நீர் கசிதல், அன்றியும் கடிவாயில் மஞ்சள் நீர் கசிதல் என்னும் குறி குணங்கள் உண்டாம்.

வேம்பின் நெய்பூச்சு

ஆடு தின்னுப்பாளையின் சமூலத்தை ஒரு மண்சட்டியிலிட் அதில் சதுரக்கள்ளிப் பால் போதுமான அளவு விட்டு ஏழுந ஊறவைத்த பிறகு நன்ருய் உலர்த்தி இடித்த தூள் பலம் ஒன் ஒரு மண்சட்டியிலிட்டு அதில் வேம்பு நெய் கால்படி விட்டு அ பேற்றி மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து ஆறவைத்து எடுத் பொரிவிரியனுல் கடிக்கப்பெற்றவன் தலையில் பூசவேண்டும்.

சாரணை கலிக்கம்

சாரணை வேரை பசுவின் பாலில் 7 நாள் ஊறவைத்து வேரை எடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு எலுமிச் பழச்சாற்றில் உரைத்துக் கண்ணில் கலிக்கம் போட வேண்டும்.

சாரணை ரசம்

கனத்த சாரணை வேரைக் குடைந்து அதில் ஒன்றே விராகனெடை பாதரசத்தை விட்டுச் சாணியில் மூடி 40 ந (1 மண்டலம்) சென்று எடுத்து பொடித்து 100 மில்லி வேப்பெண் யிற்வேளை ஒன்றுக்குக் கழஞ்சு நெய் சாப்பிடவேண்டும். இப்ப செய்தால் மேல்படி பெர்ரிவிரியன் கடிவிடம் நீங்கும்.

மூலிகைமணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்:
டாக்டர். க. வேங்கடேசன்
4, இரண்டாவது சாதுகாரமடம் வீதி, வேலூர் - 1.

இந்த இதழில்

∴ நாவல் பழம் தரும் நலம்

∴ வலிப்பு நோய்க்கு 'சடாமாஞ்சில்'

∴ தினமணி ஆசிரியருக்குக் கண்டனம்

∴ டான்சில்ஸ் தணிய, ஓடுவாய்வு கட்டிகளுக்கு, இடுமருந்தின் வேகம் முறிய, பூச்சித்தொல்லை ஒழிய, 'கண்ணப்பரின் மூலிகை மருத்துவம்'

∴ வெண்மேகம் மறைய களிம்பு; வயிற்றுப் பூச்சி ஒழிய 'நம்நாட்டு மூலிகை' வாய்ப்பு விளங்கம்.

∴ சீதபேதி நிற்க, மாதவிலக்கு வயிற்றுப் வலி மறைய, நகச்சுற்றுக்கு, பூனை கடி நஞ்சு முறிய 'ஓலைச்சுவடி' மருத்துவம்.

∴ கணைச்சூடு, நாவறட்சி நீங்க, 'சித்தர் அருளிய சிடுகா மருந்து' வாய்வு செரியாமை வராமலிருக்க 'என்ன செய்யலாம்?'

∴ விஷ ஜந்துக்களும், மூலிகைகளும்.